தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 204 07.03.2026 சனிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 204 Saturday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# 2 ஆண்டுகளில் செய்த மக்கள் பணி என்ன?

## மத்திய அமைச்சர்களிடம் விவரம் கேட்கும் பிரதமர் மோடி



**புதுடெல்லி, மார்ச்.7:**

கடந்த இரண்டு வருடங்களில் மக்களுக்காக அமைச்சகங்கள் செய்த பணிகளின் விவரத்தைக் கேட்டுள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. இவற்றை புள்ளிவிவரங்களுடன் சமர்ப்பிக்கும்படி மத்திய அமைச்சர்களுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

கடந்த 2024-ல் நாடாளுமன்ற மக்களவைக்கு பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில், முக்கியப் போட்டியாளரான பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறை பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் பதவி ஏற்றார். இவருடன் பதவியில் அமர்ந்த மத்திய அமைச்சர்களை பிரதமர் மோடி தொடர்ந்து மக்கள் பணி செய்ய வலியுறுத்தி வருகிறார்.

இந்த வகையில் அவர், கடந்த இரண்டு வருடங்களில் மத்திய அமைச்சகங்கள் மக்களுக்காக செய்த பணிகள் என்ன எனக் கேட்டிருக்கிறார். இந்த தரவுகளை புள்ளிவிவரங்களுடன் சமர்ப்பிக்கும்படி அனைத்து அமைச்சர்களுக்கும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

இது குறித்து மத்திய அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், 'அனைத்து அமைச்சர்களும் அந்தந்த அமைச்சகங்களில் முக்கிய சீர்திருத்தங்கள் குறித்த விரிவான விளக்கக் காட்சியைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

புள்ளிவிவரங்களுடனான தரவுகள் மற்றும் எடுத்துக்காட்டுகள் மூலம் அமைக்கங்களிலான சீர்திருத்தங்களின் தாக்கத்தை விளக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2024-ல் புதிய அரசு அமைந்த பிறகு அமைக்கங்களின் சீர்திருத்தங்கள் சாதாரண குடிமக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கத்தை பிரதமர் மோடி அறிய விரும்புகிறார். இதில், மத்திய அரசின் கொள்கை மாற்றங்கள், நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல் இடம்பெற்றுள்ளன.

அரசு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தில் முன்னேற்றங்கள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புகளின் மீதான மாற்றங்கள் உள்ளிட்டவற்றையும் விளக்கும் படி கோரப்பட்டுள்ளது. இவை பொதுமக்களுக்கு எவ்வாறு பயனளித்துள்ளது என்பதை பிரதமர் மோடி தன் பிரச்சாரங்களில் வெளிப்படுத்த விரும்புகிறார்.

இதன் மீதான விளக்கக் காட்சிகளில் சீர்திருத்தங்களின் பின்னணி, நோக்கங்கள், செயல்படுத்தல் செயல்முறை, எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றின் தீர்வுகள் மற்றும் அடையப்பட்ட முடிவுகள் பற்றிய உண்மை விவரம் இருக்கும்.

கொள்கை வகுப்பது மட்டுமல்ல, அவற்றை திறம்பட செயல்படுத்துவதும், களத்தில் முடிவுகளை உறுதி செய்வதும் ஒரு பொறுப்பான அரசின் முன்னுரிமை என்றும் பிரதமர் மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் மூலம், அமைச்சகங்களின் பணிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவை மக்களை மையமாகக் கொண்டதாகவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், பயனுள்ளதாகவும் மாற்ற மேலும் உத்திகள் வகுக்கப்படும்' எனத் தெரிவித்தனர்.

இந்த அறிவுறுத்தல் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரதமரால் அமைச்சர்களுக்கு நேரடியாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் இந்த அறிவுறுத்தலுக்கு பின் அனைத்து அமைச்சகங்களும் அந்தந்த துறைகளுக்கான சீர்திருத்தங்களின் பட்டியலைத் தொடர்ந்து தயாரித்து வருகின்றன.

இவை, விரைவில் வரவிருக்கும் ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலின் பிரச்சாரங்களில் பாஜக சார்பில் முன்னிறுத்தப்பட உள்ளன. ஏனெனில், மத்திய அரசுக்கு தலைமை ஏற்றுள்ள பாஜக தொடர்ந்து பொதுமக்களுக்கு பலன் தரும் தனது நிர்வாகத் திறமையால் வெற்றியைத் தொடர விரும்புவதாக தகவல்.


மிகவும் சிறப்பு வாய்ந்த இந்த மதிப்பாய்வின் மூலம், மத்திய அமைச்சர்களின் நிர்வாகத் தன்மையும் மதிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் மத்திய அமைச்சரவை விரிவக்கம் அல்லது மாற்றத்திற்கும் பயன்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(7-03-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-23
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தி இரவு 8.17 வரை பிறகு பஞ்சமி
நட்சத்திரம்:
சித்திரை நண்பகல் 12.10 வரை பிறகு சுவாதி.
யோகம்
மரண/அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | நலம் |
| ரிஷபம் | லாபம் |
| மிதுனம் | சாந்தம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | கடமை |
| விருச்சிகம் | சிறப்பு |
| தனுசு | உழைப்பு |
| மகரம் | தேர்ச்சி |
| கும்பம் | பரிசு |
| மீனம் | ஆக்கம் |

# ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா 'தற்காலிக' அனுமதி!




**புதுடெல்லி, மார்ச்.7:**

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க இந்தியாவுக்கு 30 நாட்கள் விலக்கு அறிவித்துள்ளது அமெரிக்கா. இருப்பினும், இதில் சில கட்டுப்பாடுகள் இந்த அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போர் தொடுத்துள்ளதால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் ஏற்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

இந்தப் போர் தொடர்ந்தால் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வரும் நாடுகளில் வரும் நாட்களில் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடலில் சரக்கு கப்பலில் உள்ள ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்க இந்தியாவுக்கு அமெரிக்கா தற்காலிக அனுமதி அளித்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தற்போது வாங்கும் கச்சா எண்ணெய் சரக்கு (கார்கோ) பெட்டகத்தில், அமெரிக்கா இப்போது அறிவித்துள்ள தற்காலிக அனுமதிக்கு முன்னதாக ஏற்றப்பட்டு இருக்க வேண்டும். அதேபோல, அமெரிக்காவின் வரி ஏற்ற அறிவிப்பின் காரணமாக மற்ற நாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்பட்டு, கடலில் தேக்கம் அடைந்திருக்கும் ரஷ்ய கச்சா எண்ணெய் சரக்குகளையும் இந்தியா இப்போது வாங்கலாம் என சில கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

### ரஷ்யா - இந்தியா - அமெரிக்கா: கச்சா எண்ணெய் பின்னணி

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை ஐரோப்பிய நாடுகள் நிறுத்தின. இந்தியா தொடர்ந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்கியது. இது உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவை ஊக்குவிப்பதாக இருக்கும் என்று இந்தியாவுக்கு கூடுதல் வரி விதித்தார் ட்ரம்ப்.


ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் இந்தியாவுக்கான வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைத்தது, இதையடுத்து கடந்த சில வாரங்களாக ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்தது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கச்சா எண்ணெய் வாங்குவது கண்டுபிடிக்கப்பட்டால், அமெரிக்கா 25 சதவீத கூடுதல் வரியை மீண்டும் விதிக்கும் எனவும் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது இதில்தான் இந்தியாவுக்கு விலக்கு அறிவித்துள்ளது அமெரிக்கா.

இதனிடையே, இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விநியோகம் செய்ய ரஷ்யா எப்போதும் தயார் என்று இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் டெனிஸ் அலிபோவ் கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

# அண்ணா ஆட்சியில் அமர்ந்து தமிழினம் தலைநிமிர்ந்த நாள்!

## - முதல்வர் மு.க. ஸ்டாலின்





**சென்னை, மார்ச்.7:**

மார்ச் 6 அண்ணா ஆட்சியில் அமர்ந்து தமிழினம் தலைநிமிர்ந்த நாள் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் தனது எக்ஸ் பக்க பதிவில், 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்று, தமிழ்நாட்டின் எழுச்சிக்கும் தமிழினத்தின் மீட்சிக்கும் விதையூன்றிய இந்த நாளில், அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான ஸ்டாலின் வாக்குறுதியை (STALIN STATEMENT) அறிவிக்க இருக்கிறேன்!

திராவிட ஆட்சி இந்த மண்ணில் மையம் கொண்ட நாளிலேயே, திராவிட மாடல் 2.0-வுக்கான அடிக்கல்லை நாட்டுகிறேன்... உங்கள் அனைவரின் ஆதரவோடும்! என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் ஜூலை 17-ம் தேதி முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி - அரசாணை வெளியீடு



**சென்னை, மார்ச்.7:**

நாடு முழுவதும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 2011-ம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் பிறகு 2021-ம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கொரோனா பெருந்தொற்று காரணமாக கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது.

இந்த சூழலில் நாடு முழுவதும் இரு கட்டங்களாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் முதற்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் வரும் ஜூலை 17ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 30ம் தேதி நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. 45 நாட்கள் நடைபெறும் இந்த கணக்கெடுப்பில் வீட்டின் நிலை, வசதிகள், சொத்துக்கள், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட 33 கேள்விகள் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 பெரிய மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய மகாராஷ்டிரா, முன்னேறிய தமிழகம்!

**புதுடெல்லி, மார்ச்.7:**

இந்தியாவின் நான்கு மிகப்பெரிய பொருளாதார மாநிலங்களில் கடந்த 4 ஆண்டுகளில் மகாராஷ்டிர மாநிலம் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதேவேளையில், ஒட்டுமொத்தப் பொருளாதார மதிப்பில் (GSDP) அந்த மாநிலமே இப்போதும் முதலிடத்தில் நீடிக்கிறது.

2024-25 நிதியாண்டில் மகாராஷ்டிராவின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ.42,67,771 கோடி என்று கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், கர்நாடகம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களை விட இம்மாநிலம் பின் தங்கியுள்ளது.

### கர்நாடகம் முதலிடம்

கரோனா காலத்திற்குப் பிந்தைய சூழலில் (2021-22 முதல் 2024-25 வரை), கர்நாடக மாநிலம் சுமார் 65 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது.

பெங்களூரை மையமாகக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைத் துறைகளின் அசுர வளர்ச்சியே இதற்குக் காரணமாக கூறப்படுகிறது. கர்நாடகத்தின் ஜிஎஸ்டிபி ரூ.17,02,227 கோடியிலிருந்து ரூ.28,09,063 கோடியாக உயர்ந்துள்ளது.

### இரண்டாவது இடத்தில் குஜராத்

தொழில்துறை மற்றும் உற்பத்தித்துறையில் வலுவாக உள்ள குஜராத் மாநிலம், 48 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அந்த மாநிலத்தின் பொருளாதார மதிப்பு ரூ.18,79,826 கோடியிலிருந்து ரூ.27,90,000 கோடியாக அதிகரித்துள்ளது.

### தமிழகத்துக்கு மூன்றாவது இடம்

பட்டியலில் 3வது இடத்தைப் பிடித்துள்ள தமிழகம், சுமார் 47% வளர்ச்சியை எட்டியுள்ளது. 2021-22-ல் ரூ.21,36,351 கோடியாக இருந்த தமிழகத்தின் ஜிஎஸ்டிபி, 2024-25-ல் ரூ.31,55,096 கோடியாக உயர்ந்துள்ளது.

இதன் மூலம், ஒட்டுமொத்தப் பொருளாதார அளவில் மகாராஷ்ட்ராவுக்கு அடுத்தபடியாகத் தமிழகம் நெருக்கமான போட்டியாளராக உருவெடுத்துள்ளது.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# சனிப்பெயர்ச்சி விழா



**திருவண்ணாமலை , மார்ச் 07:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் நவகிரகங்களுள் ஈஸ்வர பட்டம் பெற்ற சிறப்பு உடைய ஸ்ரீசனீஸ்வர பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு 06.03.2026 வெள்ளிக்கிழமை காலை 8.24க்கு பெயர்ச்சி நடைபெறுவதை முன்னிட்டு கீழ்பென்னாத்தூர் பேரூர் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேசுவரர் திருக்கோவிலில் ஆலய வளாகத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீசனீஸ்வர பகவானுக்கு காலை 7.15 மணிக்கு சிறப்பு ஹோமங்கள், அபிஷேகங்கள் பால், தயிர், அரிசிமாவு, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர், கங்கைநீர், தேன், புனித கலச நீர் முதலிய பதினொறு வகை சிறப்பு அபிஷேகங்கள், பின்னர் புஷ்ப அபிஷேகம் நடைபெற்று, காலை 8.24 மணிக்கு மகா தீபாராதனையும் நடைபெற்றது.

இவ்விழாவில் சுமார் 1000க்கும் மேற்பட்ட பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# செல்லப்பம்பாளையம் தொடக்கப்பள்ளியில் விளையாட்டு போட்டிகள்



**மொடக்குறிச்சி, மார்ச் 07:**
மொடக்குறிச்சி ஒன்றியம், கஸ்பாபேட்டை ஊராட்சி, செல்லப்பம்பாளையம் தொடக்கப்பள்ளியில் 06.03.2026 காலை 9.00மணி அளவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து விளையாட்டு போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டது.

தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள், செங்கரைப்பாளையம் அங்கன்வாடி குழந்தைகள், பெண்கள், ஆண்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் தனித்தனியே விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற அனைவருக்கும் இன்று மாலையில் நடைபெறும் 23-ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும் நன்றி! வணக்கம்!

# மதுரை டூ மத்திய அரசு: யுபிஎஸ்சி தேர்வில் வாடிப்பட்டி ராஜேஸ்வரி இரண்டாமிடம்! இது முதல் சாதனை அல்ல..

**சென்னை, மார்ச் 07:**
மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சிவில் சர்வீஸ் தேர்வில் மதுரையைச் சேர்ந்த ராஜேஸ்வரி, அகில இந்திய அளவில் இரண்டாமிடம் பிடித்துள்ளார்.

மதுரை வாடிப்பட்டியைச் சேர்ந்த ராஜேஸ்வரி சுவே, தரவரிசைப் பட்டியலில் முதல் 5 இடங்களில் ஒரே பெண்மணியாகத் திகழ்கிறார்.

2018-ல் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் மின்பொறியியல் படிப்பை முடித்த ராஜேஸ்வரி, ஏற்கெனவே டிஎன்பிஎஸ்சி குரூப் 1 தேர்வில் முதலிடம் பிடித்து, துணை ஆட்சியராக பணிபுரிந்து வருகிறார். யுபிஎஸ்சி சிவில் சர்வீஸ் தேர்வின் முடிவுகள்




இன்று வெளியிடப்பட்டு, தேர்வு எழுதியவர்களில் மொத்தம் 958 பேரை சிவில் சர்வீஸ் பணிகளுக்குத் தேர்வாணையம் பரிந்துரைத்துள்ளது.

அகில இந்திய அளவில் ராஜஸ்தானின் சித்தோர்கர் மாவட்டத்தைச் சேர்ந்த அனுஜ் அக்னிஹோத்ரி முதலிடமும், மதுரை வாடிப்பட்டியைச் சேர்ந்த ராஜேஸ்வரி இரண்டாமிடமும், சண்டிகரை சேர்ந்த அகான்ஷ் துல் மூன்றாமிடமும் பிடித்துள்ளனர்.

# பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ‘டெட்’ தேர்வுக்கு ஆன்லைன் பயிற்சி

அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகளில் பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான (டெட்) ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு மார்ச் 9-ந்தேதி முதல் ஆன்லைன் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தமிழ் ஐ.ஏ.எஸ் அகாடமி அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அகாடமி வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பணிபுரியும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர் தேர்வு வாரியம் சார்பில் 2026-ம் ஆண்டுக்கான அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகளில் பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி பிப்.18-ந்தேதி முதல் ஏப்ரல் 10-ந்தேதி வரை பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு கல்லூரியில் தொழுநோய் விழிப்புணர்வு முகாம்

**அறந்தாங்கி,மார்ச்07:**
அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், நாட்டு நலப்பணித்திட்டமும், பொன்பேத்தி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் இணைந்து, தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தின்கீழ், தொழுநோய் விழிப்புணர்வு முகாமை நடத்தின.



கல்லூரித் திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்ற இம்முகாமை, கல்லூரி முதல்வர் முனைவர் ம.துரை அவர்கள் தலைமை தாங்கித் தொடங்கி வைத்தார்.

முகாமில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற பொன்பேத்தி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் மரு.தி.செல்வகுமரன் அவர்கள், தொழுநோயின் அறிகுறிகள், அதன் விளைவுகள், தடுப்புமுறைகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய சலுகைகள் குறித்து விளக்கிப் பேசினார். பொன்பேத்தி அரசு ஆரம்ப சுகாதார நிலைய சுகாதார ஆய்வாளர்கள் பெ.வீரக்குமார்,ச. ராம்குமார்,வி.தேவபிரசாத், இரா.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் பங்கேற்ற 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்குத் தொழுநோய் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பெற்றன. க.பாண்டிச்செல்வி,இரா. ராஜலட்சுமி, க.சிவனேசன்,ரா. ஜனனி, முனைவர் ரா.பிரகதாம்பாள், முனைவர் சி.அழகர், ரா.ராதிகா, பொ.கார்த்தி கேயன், கோவிந்தன் உள்ளிட்ட பல்துறை விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் முகாமை ஒருங்கிணைத் திருந்தனர்.

முகாமின் நிறைவாக தொழுநோய் ஒழிப்பு உறுதிமொழியை, சுகாதார ஆய்வாளர் வி. தேவபிரசாத் வாசித்தளிக்க, அனைவரும் ஏற்றுக்கொண்டனர். முன்னதாக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மு. பழனித்துரை அனைவரையும் வரவேற்றார். நிறைவாகக் கல்லூரி ஆங்கிலத்துறை முதலாம் ஆண்டு மாணவி அப்சரா பானு நன்றி கூறினார்.

முகாம் ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் பலரும் செய்திருந்தனர்.

# திமுக சார்பில் திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட மருத்துவர் சௌந்தர்ராஜன் விருப்பமனு

**கடலூர், மார்ச்.07:**
சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.





தற்போதைய அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட விருப்ப மனுக்களை அளித்து வருகிறார்கள். அதேபோன்று தி.மு.க. நிர்வாகிகள் பலரும் ஆர்வத்துடன் விருப்ப மனுக்களை வழங்கி வருகிறார்கள்.

தி.மு.க.வில் கடலூர் மாவட்டம் திட்டக்குடி 151 சட்டமன்ற தனி தொகுதிக்கு கோடங்குடி கிராமத்தை சேர்ந்த மருத்துவர் நா.சௌந்தர்ராஜன் அருவைசிகிச்சை நிபுணர் விருப்பமனு அளித்தார்.

இவர் விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் துணை பேராசிரியராகவும் திட்டக்குடி தனி தொகுதியில் மக்களிடம் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடதக்கது.

அப்போது அவர் கூறியதாவது கலைஞர் விட்டு சென்ற பணிகளை கடமை தவறாமல் நிறைவேற்ற தயாராக இருக்கும் தலைவர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்த திட்டக்குடி தொகுதியில் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளித்தாள் தொகுதியின் வளர்ச்சிக்கு திட்டங்கள் செயல்படுத்த வேண்டும் மக்கள் பிரச்சினைகள் அனைத்தும் என்னென்ன என்பதை ஆய்வு செய்து அதனை படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என மருத்துவர் சௌந்தர்ராஜன் உறுதியளித்தார்.

# புதிய அறிவிப்புகளை சிறுகனூர் மாநாட்டில் முதலமைச்சர் வெளியிடுவார்- அமைச்சர் கே.என்.நேரு

**திருச்சி, மார்ச் 07:**
தமிழக சட்டமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் திருச்சி சிறுகனூரில் வருகிற 9-ந்தேதி தி.மு.க. சார்பில் 12-வது மாநில மாநாடு நடைபெறுகிறது. இதில் 10 லட்சம் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். சுமார் 500 ஏக்கரில் மாநாட்டு திடல் அமைக்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

மாநாட்டு திடலில் 10 பிரம்மாண்ட நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டு உள்ளன. பிரம்மாண்ட மேடை மற்றும் லட்சக்கணக்கான தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் அமருவதற்கான நாற்காலிகள் போடும் பணி நடந்து வருகிறது. வண்ண விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டர்கள் அமர சிவப்பு நிறத்தில் கம்பளங்களும் விரிக்கப்பட்டு உள்ளன.

மாநாட்டின் மூன்று பக்கங்களிலும் தி.மு.க. அரசின் திட்டங்களை பிளக்ஸ்



பேனர்களாக வைத்துள்ளனர். அதில் அண்ணா, கலைஞர், பெரியார், மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் படங்கள் இடம்பெற்றுள்ளது. இந்தநிலையில், இன்று தி.மு.க. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு மாநாட்டு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

திருச்சி சிறுகனூரில் மார்ச் 9-ந்தேதி மதியம் 3 மணிக்கு கலை நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்க உள்ளது. 5.30 மணிக்கு தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் 100 அடி கம்பத்தில் கட்சி கொடியேற்றி மாநாட்டை தொடக்கி வைக்க உள்ளார்.

கடந்த தேர்தலின்போது இதே இடத்தில் மகளிர் உரிமைத்தொகை போன்ற 7 வாக்குறுதிகளை அறிவித்தார். அது தேர்தலில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதே போன்று இந்த மாநாட்டிலும் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிடுவார் என எதிர்பார்க்கின்றோம். ஏற்கனவே அறிவித்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நீங்களே பார்த்திருப்பீர்கள். அதேபோன்று புதிய அறிவிப்புகளோடு சிறந்த மாநாடாக இது அமையும்.

தேர்தல் அறிக்கையில் இருந்து ஏதாவது ஒன்று, இரண்டு அறிவிப்புகளை இங்கு வெளியிடலாம். நிதிநிலைக்கு ஏற்ப என்ன செய்ய முடியுமோ அதனை தான் அறிவிக்க வேண்டும். அறிவித்துவிட்டு செய்யாமல் இருந்தால் சரியாக இருக்காது. எதை செய்ய முடியுமோ அதை முதலமைச்சர் அறிவிப்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 2026 ஆம் ஆண்டுக்கான திருவண்ணாமலை சட்டமன்றத் தேர்தலுக்கான மாண்புமிகு அமைச்சர் எ. வ.வேலு அவர்கள் விருப்பமனு





**சென்னை, மார்ச் 07:**
அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்கான விருப்பமனுவை அளித்தார். உடன் திருவண்ணாமலை மாவட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பொள்ளாச்சியில்

# ரூ.100 கோடி மதிப்பில் தென்னை நார் ஏற்றுமதி பாதிப்பு



**பொள்ளாச்சி, மார்ச் 07:**
பொள்ளாச்சி பகுதியில் தென்னை நார் தொழில் பிரதானமாக உள்ளது.

தென்னை மட்டையில் இருந்து நார் துகள்கள் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் 60 ஆயிரம் தென்னை நார் தொழிற் சாலைகளும், தமிழகத்தில் 12 ஆயிரம் சிறு, குறு தொழிற் சாலைகளும் செயல்பட்டு வருகின்றன.

பொள்ளாச்சியில் உள்ள ஆலைகளில் உற்பத்தியாகும் தென்னை நார் துகள் மற்றும் நார்கள் சென்னை, தூத்துக்குடி, கொச்சி போன்ற துறைமுகங்களுக்கு கன்டெய்னர்களில் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கப்பல் வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாடுகளில் மதிப்பு கூட்டுப் பொருட்களாக தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது ஈரான்-இஸ்ரேல், அமெரிக்க இடையே போர் நடைபெற்று வருகிறது. இதனால் ஈரான் தனது கடல் எல்லையை மூடி விட்டதால் வர்த்தக கப்பல் போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் சென்னை, தூத்துக்குடி மற்றும் கேரளத்தின் கொச்சி துறைமுகங்களில் தென்னை நார் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படாமல் தேங்கி கிடப்பதால் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய தென்னை நார் கூட்டமைப்பினர் கூறியதாவது:-

இந்தியாவில் ஆண்டுக்கு 11 லட்சம் டன் தென்னை நாரும், 20 லட்சம் டன் தென்னை நார் துகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை 125 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்கனவே அமெரிக்க விதித்த வரி உயர்வு காரணமாக இந்த தொழில் பாதிக்கப்பட்டு இருந்தது. பின்னர் வரி குறைப்பின் காரணமாக சிறிய முன்னேற்றம் காணப்பட்டது.

தற்போதைய போரால் ஈரான் தனது கடல் எல்லையை மூடியதால் வெளிநாடுகளுக்கு தென்னை நார் பொருட்களின் ஏற்றுமதி குறைந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் ரூ.100 கோடிக்கு ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் 2 மாதங்கள் போர் நீடித்தால் ரூ.1000 கோடி வரை தென்னை நார் மற்றும் நார் துகள் ஏற்றுமதி பாதிக்க வாய்ப்புள்ளது.

மத்திய அரசு உள்நாட்டு வணிகத்தை அதிகப்படுத்தும் சாத்திய கூறுகளை கயிறு வாரியம் மூலம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கயிறு வாரியம், உற்பததியாளர்கள் கொண்ட குழுவை அமைத்து சிங்கப்பூர், மலேசியா, கம்போடியா, நேபாளம், பூடான், ஜப்பான், தென்கொரியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு அழைத்து சென்று தொழில் முன்னேற்றத்துக்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நாகையில் இருந்து இலங்கைக்கு மீண்டும் தொடங்கிய பயணிகள் கப்பல் சேவை,

**நாகப்பட்டினம், மார்ச் 07:**
தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு இந்தியா-இலங்கை இடையே கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந்தேதி 'செரியாபாணி' என்ற பெயரில் பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, வடகிழக்கு பருவமழை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அதே மாதம் 23-ந்தேதி கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

அதன் பின்னர், 'சுபம்' என்ற



கப்பல் நிறுவனம் மீண்டும் நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு 'சிவகங்கை' என்ற பெயரில் கப்பல் இயக்க முடிவு செய்து, கடந்த 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ந்தேதி முதல் பயணிகள் கப்பல் சேவையை தொடங்கியது. வாரத்தில் சனிக்கிழமை தவிர்த்து மற்ற 6 நாட்களும் இரு மார்க்கத்திலும் கப்பல் சேவை இயக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த ஆண்டு (2025) நவம்பர் மாதம் முழுவதும் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது. பின்னர், டிட்வா புயலின் தாக்கத்தால் இலங்கை காங்கேசன்துறையில் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்கும் பணிகள் நடைபெற்றதால் தேதி குறிப்பிடாமல் கப்பல் சேவை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் இயல்பு நிலை திரும்பியதால் நேற்று முதல் கப்பல் சேவை தொடங்கியது. நீண்ட நாள்களுக்கு பிறகு தொடங்கப்பட்ட இந்த ஆண்டின் முதல் கப்பல் சேவையின் முதல் நாளில் முன்பதிவு செய்திருந்த 77 பயணிகளுடன் நாகையில் இருந்து இலங்கைக்கு கப்பல் புறப்பட்டது.



















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER






ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901













## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424










## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588





## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!



விழி
மொழி புரிந்தும்
மௌனத்தை
பரிசளித்து
நீயே
என் விடையாகிப்போனாய்

துரத்தும்
பிம்பத்தை
கலைத்தே
களைத்து
போனது
கண்கள்

நினைவிலும்
நிஜத்திலும்
என் மகிழ்வெல்லாம்
உன்னால்

உன் நினைவு
தொற்றி கொண்டால்
என்னுள்ளும்
பல கிறுக்கல்கள்
கவிதைகளாக

உன் தேடல்
எதுவாகவும்
இருக்கட்டும்
என் தேடல்
நீயே

# வாழ்க்கை தத்துவம்...



கீழே விழாமல் இருப்பது பெருமையில்லை, விழுந்த பொழுதெல்லாம் எழுந்திருப்பதே பெருமை.

என்னிடம் 6 நாணயமான நண்பர்கள் இருக்கின்றனர், அவர்கள்தான் எனக்கு எல்லாம் கற்றுத் தருகின்றனர். அவர்களுடைய பெயர்கள் - எங்கே? என்ன? எப்போது? ஏன்? எப்படி? யார்?

இதயத்தால் காதல் கொள், கண்களால் அல்ல.

எங்கே வாழ்க்கை தொடங்கும், அது எங்கே எவ்விதம் முடியும், இதுதான் பாதை இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது. பாதையெல்லாம் மாறிவரும், பயணம் முடிந்துவிடும், மாறுவதைப் புரிந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்.

உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலைவணங்காமல் நீ வாழலாம்.

# திருமணம்



வீடு பரபரப்பாக இருந்தது. ராமசாமி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார். 'சுமதி சீக்கரம் ரெடியாகு "- கோகிலா சமயலறையில் இருந்து சத்தம் போட்டாள் . 'கொஞ்சம் இரும்மா.. வரேன்' என பதில் கொடுத்த சுமதி மேக்கப்பில் ஈடுபட்டாள் .விஷயம் இதுதான். இன்று மாப்பிள்ளை வீட்டார் சுமதியை பெண் பார்க்க வருகிறார்கள். அதனால்தான் இந்த பரபரப்பு, சுமதி ஒரு ஐ டி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறாள். பல இடங்களில் வரன் தேடியும் சுலபமாக ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு வழியாக புரோக்கர் பொன்னுதுரை ஏற்பாட்டில் நல்ல மாப்பிள்ளை இருப்பதாக கூறினார் ராஜதுரை தனியார் நிறுவனத்தில் மேலாளர் வேலை பார்த்து வருகிறான். கை நிறைய சம்பளம் .நல்ல பையன் என சான்று கொடுத்தார். அதனால் இன்று பெண் பார்க்க வருவதாக கூறியிருந்தனர். எனவே அதற்கான ஏற்பாடு நடந்தது . சரியான நேரத்தில் வந்தனர். அழகுப் பதுமையாக சுமதி ஜொலித்தாள். அவளைப் பார்த்த மாத்திரமே ராஜதுரைக்கு பிடித்து விட்டது. மேற்கொண்டு செய்ய வேண்டியதை பாருங்கள் என மாப்பிள்ளை வீட்டார் கூறினர் .ராமசாமி -கோகிலாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் இந்த திருமணத்தில் சுமதிக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை. காரணம் அவள் நிறுவனத்தில் வேலை பார்த்து வரும் பாபுவை காதலித்து வந்தாள் .வீட்டில் எப்படி சொல்வது என புரியவில்லை. எனவே ஒரு முடிவுக்கு வந்தாள் .

- இந்த நிலையில் .. சுமதி வேலை பார்த்த நிறுவனத்துக்கு ராஜதுரை நண்பர் மற்றும் அவன் உறவினர் ஒருவரும் வந்திருந்தனர். அங்கு சுமதியின் சக ஊழியர்கள் சிலரை சந்தித்து பேசினர் . சுமதியின் குணம், பேச்சு போன்றவை குறித்து அவளுக்கே தெரியாமல் விசாரித்து விட்டு சென்றனர். இந்த விஷயம் மாலையில் வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்பட்ட சுமதியின் காதில் தோழிகள் . நைசாக போட்டதும் அவளுக்கு ஒருபக்கம் வருத்தமாக இருந்தாலும் மறுபுறம் சந்தோஷம் ஏற்பட்டது. நல்ல ஆயுதம் கையில் கிடைத்து விட்டது. திருமணத்தை நிறுத்து வழி கிடைத்துவிட்டது. வேகமாக வீட்டுக்கு வந்தாள் . பேக்கை வீசி எறிந்தவள் அறைக்குள் நுழைந்தாள் . அவளின் நடவடிக்கையைக் கண்டஅம்மா கோகிலா மெல்ல அவளிடம் சென்று , 'ஏண்டி என்ன ஆச்சு..?" என்று விசாரித்தாள் .அடுத்த நிமிடமே எண்ணெயில் போட்ட கடுகு மாதிரி வெடித்தாள் .நடந்ததை கேட்டதும் கோகிலா, சரி விடு..இதெல்லாம் கண்டுக்காதே.."என ஆறுதல் கூறினாள் .ஆனாலும் அவள் கோபம் குறையவில்லை. நடந்தவற்றை கூறினாள் .அப்பா, அம்மா இருவருமே ஆத்திரமடைந்தனர் . .

----

சிறிது நேரத்தில் ராமசாமி போனில் மாப்பிள்ளை வீட்டாரிடம் பேசினார். "கல்யாணம் நடக்கிறதுக்கு முன்னாடியே இப்படி வேவு பார்க்கும் நீங்கள் சந்தேகப் பேர்வழி என்பதில் எந்த சமரசமும் செய்ய முடியாது. என் பெண்ணை உங்க வீட்டில் திருமணம் செய்த பிறகு இப்படி நடக்க மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. அதனால் இந்த சம்பந்தம் எனக்கு பிடிக்கவில்லை. என்று கூறிவிட்டு போனை வைத்தார். இப்போதுதான் சுமதிக்கு நிம்மதி வந்தது. பாபுவிடம் நைசாக பேசி வீட்டுக்கு பெண் பார்க்க வர சொல்ல தீர்மானித்தாள் .



**-எஸ்.ரவீந்திரன்,**
சென்னை-56

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: டிரெஸ் எடுக்க போலயா?*

*மனைவி: ஆசை தான்.. வேணா கார்டு கொடு.. பர்ச்சேஸ் போயிட்டு வரேன்!*

*கணவன்: மூதேவி மழை பெய்யுது.. காயப்போட்ட டிரெஸ் எடுக்க போலயான்னு கேட்டேன்!*



# தினம் ஒரு சமையல்



## தினை இனிப்பு கஞ்சி

தேவையான பொருட்கள்:

*தினை - 1கப்*
*நாட்டு சர்க்கரை - 5 ஸ்பூன்*
*தேங்காய்துருவல் -2ஸ்பூன்*
*பால் -,1 கப்*
*நல்லெண்ணெய் - 3 ஸ்பூன்*
*தண்ணீர் - 4 கப்*

செய்முறை:



முதலில்தினையை சுத்தம் செய்து 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். பின் பானையில் 4-பங்கு தண்ணீர் விட்டு வேகவிடுங்கள்.பாலை காய்ச்சி வைத்துக்கொள்ளுங்கள்.

பின் வேறுபாத்திரத்தில் வேகவைத்த தினை,நாட்டுச்சர்க்கரை, சேர்த்து நன்கு கலந்துவிடுங்கள்.தேங்காய் துருவல்சேர்க்கவும்.

பின் பால் சேர்த்து நன்கு கலந்துவிடுங்கள்.ஒன்று போல் சேர்ந்துவந்ததும் உடனே கீழே இறக்கிவிடுங்கள்.உடனே சாப்பிடலாம்.சத்தானது.

நல்லெண்ணெய் பிடித்தவர்கள் மேலே தினை கஞ்சி மேல் ஊற்றி சாப்பிடலாம்.சுவையான தினைஇனிப்பு கஞ்சி ரெடி. குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை சுவைத்து மகிழுங்கள்.

# மொசுமொசுக்கை பயன்கள்



முசுமுசுக்கை நிலம் படிந்த அல்லது ஏறி வளரும் சிறுகொடி. தாவரம் முழுவதும் சொர சொரப்பான சுணைகள் கொண்டது. இலைகள் வெளிர் பச்சை நிறமானவை. முக்கோண வடிவமானவை. 3-5 மடலானவை.

தொண்டி முத்தூஸ்

முசுமுசுக்கை நிலம் படிந்த அல்லது ஏறி வளரும் சிறுகொடி. தாவரம் முழுவதும் சொர சொரப்பான சுணைகள் கொண்டது. இலைகள் வெளிர் பச்சை நிறமானவை. முக்கோண வடிவமானவை. 3-5 மடலானவை. பழங்கள் சிவப்பு நிறமானவை.

* பூ இதழ்கள் மஞ்சள் நிறமானவை. பழம் காம்பு அற்றது. விதைகள் குழிகளுடன் கூடியவை. மொசுமொசுக்கை, மாமூலி, ஆயிலேயம் என்கிற மாற்றுப் பெயர்களும் உண்டு. தமிழகமெங்கும் வேலிகள், புதர்களில் பெருமரங்களைச் சுற்றி வளர்கின்றது. இலை, வேர் ஆகியவை மருத்துவப் பயன் மிக்கவை.

* முசுமுசுக்கை துவர்ப்பு, கார்ப்புச் சுவைகளும் வெப்பத் தன்மையும் கொண்டது. வள்ளலார் சிறப்பாக விளக்கியுள்ள நான்கு மூலிகைகளுள் முசுமுசுக்கையும் ஒன்றாகும்.

* முசுமுசுக்கை வேர், பசியை அதிகரிக்கும்; நஞ்சை நீக்கும்; சளியை அகற்றும்; வாந்தியை கட்டுப் படுத்தும்; ஆண்மையை அதிகரிக்கும்.

* இலை கோழையை அகற்றும்; இருமல், இரைப்பு, ஜலதோஷம் ஆகியவற்றை குணமாக்கும்.

* இரைப்பிருமல் குணமாக இலையை நிழலில் காயவைத்து தூள் செய்து வைத்துக் கொண்டு 120 கிராம் அளவு தூதுவளை இலைத் தூள் 80 கிராம் அளவுடன் ஒன்றாக கலந்து பத்திரப்படுத்தி கொள்ள வேண்டும். இதில் அரை தேக்கரண்டி அளவு வெண்ணெய்யில் கலந்து சாப்பிட வேண்டும். 100 நாள்கள் வரை இவ்வாறு செய்யலாம்.

* கண் எரிச்சல், உடல் எரிச்சல் குணமாக இலைச்சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி வாரம் இரு முறை தலை முழுக வேண்டும்.

* வாந்தி குணமாக வேரை உலர்த்தி தூள் செய்து கொண்டு, அரை தேக்கரண்டி அளவு ஒரு டம்ளர் நீரில் இட்டு அரை டம்ளராக சுண்டக் காய்ச்சி வடிகட்டி குடிக்க வேண்டும்.

முசுமுசுக்கை தோசை: 3 பிடி இலைகளை கால் கிலோ அரிசியுடன் சேர்த்து, அரைத்து மாவாக்கி, தோசை செய்து சாப்பிட வேண்டும். காய்ச்சல், சளியுடன் கூடிய காய்ச்சல், நாக்குச் சுவையின்மை ஆகியவை தீரும்.

முசுமுசுக்கை துவையல்: 3 பிடி இலைகளை நெய் அல்லது நல்லெண்ணெய்யில் வதக்கி துவையலாக்கி, தாளித்து சாப்பிட்டு வர வேண்டும். இரைப்பிருமல், மூக்குப் புண் போன்றவை குணமாகும். ரத்தமும் சுத்தமாகும்.

# சினிமா

## விஜய்யின் ஜனநாயகன் பட ரிலீஸ் எப்போது தெரியுமா?... வெளிவந்த தகவல்



தமிழ் சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரமாக, பாக்ஸ் ஆபிஸ் கிங்காக இருப்பவர் தான் நடிகர் விஜய்.

இவர் கடைசியாக தனது 69வது படத்தில் நடித்து முடித்துள்ளார். ஜனநாயகன் என பெயரிடப்பட்டுள்ள இப்படம் 2026 பொங்கல் ஸ்பெஷலாக வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. ரிலீஸ் நெருக்கத்தில் படத்தின் சென்சார் பிரச்சனை காரணமாக தள்ளிப்போனது.

ஜனவரி ரிலீஸ் ஆகும், பிப்ரவரி ரிலீஸ் ஆகும் ரசிகர்களும் காத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

விஜய்யின் கடைசிப்படமான ஜனநாயகன் படத்தை திரையில் கண்டு கொண்டாட ரசிகர்கள் மிகவும் ஆர்வத்தில் உள்ளனர்.

தற்போது வந்துள்ள தகவல் என்னவென்றால், வருகிற மார்ச் 17ம் தேதிக்குள் ரிவைசிங் கமிட்டி படத்தைப் பார்த்து தணிக்கைச் சான்றிதழை வழங்கும் என்று ஜனநாயகன் படக்குழுவினர் எதிர்ப்பார்க்கின்றனர்.

தமிழகத் தேர்தல் முடிந்த ஒரு வாரத்திற்குப் பிறகு படத்தை ரிலீஸ் செய்ய KVN தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




நடிகை பிரியங்கா மோகன் தற்போது படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சிக்கு கிளாமர் உடையில் வந்திருக்கும் ஸ்டில்கள் இதோ.

## ரஜினி, ஜெயலலிதா, தனுஷ் வரிசையில் போயஸ் கார்டனில் நயன்தாரா வாங்கிய பிரம்மாண்ட வீடு.. விலை எவ்வளவு தெரியுமா

தென்னிந்திய சினிமாவில் பணக்கார நடிகைகளில் ஒருவர் நயன்தாரா. இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த மன சங்கர வர பிரசாத் காரு படம் மாபெரும் வெற்றி பெற்றது.

இதை தொடர்ந்து மூக்குத்தி அம்மன் 2, Hi, ராக்காயி, மண்ணாங்கட்டி என பல திரைப்படங்கள் நயன்தாரா நடிப்பில் வெளிவரவுள்ளன. இந்த படங்களை திரையில் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

போயஸ் கார்டன் என சொன்னாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது ரஜினிகாந்த்தான். மேலும், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் வீடும் அங்குதான் உள்ளது. இவர்கள் மட்டுமின்றி நடிகர் தனுஷ், சந்தானம் ஆகியோருக்கும் அங்கு வீடு உள்ளது.



இந்த நிலையில், நடிகை நயன்தாரா - விக்னேஷ் விக்னேஷ் சிவன் புதிதாக போயஸ் கார்டனில் பிரம்மாண்டமான DUPLEX APARTMENT ஒன்றை வாங்கியுள்ளார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளது. இந்த பிரம்மாண்ட வீட்டின் விலை ரூ. 31.5 கோடி என கூறப்படுகிறது.

# அயோத்தி நாகேஸ்வர நாதர் கோவில்





அயோத்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது ராமர் கோவில் தான் அங்கு நாகேஸ்வரநாத் என்ற பெயரில் சிவபெருமானும் அருள் பாலிக்கிறார் நகரின் மையமான ராம்கி பைடியில் இந்த கோவில் உள்ளது ஸ்ரீ ராமரின் மகனானகுஷன் சரயு நதிக்கரையில் நீராடினான் அப்போது கையில் கட்டி இருந்த தாயத்து நழுவி நீருக்குள் மூழ்கியது நீண்ட நேரம் தேடியும் கிடைக்காததால் கவலையுடன் அரண்மனைக்கு சென்றான் சிறிது நேரத்தில் நாகக்குலத்தை சேர்ந்த நாககன்னி தாயத்துடன் வந்தாள் அதைப் பெற்றுக் கொண்ட குசன் ரொம்ப சந்தோசம் உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்டான் நான் வழிபட சிவன் கோயிலை கட்டிக் கொடுங்கள் என்றாள் அவரின் விருப்பப்படியே கோவில் கட்டப்பட்டது சுவாமிக்கு நாகேஸ்வரநாத் என பெயர் சூட்டினார்

ஒரு கட்டத்தில் அயோத்தியை சுற்றியுள்ள கோயில்கள் சேதப்படுத்தப்பட்டன ஆனால் இந்த கோவிலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை ஆச்சரியப்பட்ட சந்தரகுப்த விக்கிரமாதித்த மன்னர் கோயிலை சீரமைத்து கொடுத்தார் 1750 இல் சப்தர்ஜங் அவையில் அமைச்சர் நவாஸ்ராய் புதுப்பித்த கோவில்தான் தற்போது உள்ளது பல வண்ணங்களால் ஜொலிக்கும் நுழைவு வாயில் பக்தர்களை வரவேற்கிறது அழகிய சுவர்களில் கண்கவரும் விதத்தில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன

வட இந்திய பாணியில் மூன்று கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன கருவறையின் மேல் பகுதி வெள்ளியால் ஆனது சுவாமி நாகேஸ்வரநாத் தீப ஒளியில் மின்னுகிறார் இவரை வேண்டினால் விஷ ஜந்துக்களால் பிரச்சனை ஏற்படாது சிவராத்திரி பல்லக்கு ஊர்வலத்தில் பங்கேற்றால் பாவம் தீரும். சன்னதியில் கணேஷ் அனுமனையும் தரிசிக்கலாம் அயோத்திக்கு செல்பவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய கோவில் இது ராம் மந்திர் பகுதியில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.





-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# அகமதுல்லா ஷா வரலாறு

பைசாபாத்தின் மௌல்வி என்று அழைக்கப்படும் அகமதுல்லா ஷா (1787 - 5 ஜூன் 1858) , ஒரு பிரபலமான சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியின் தலைவராக இருந்தார். மௌலவி அகமதுல்லா ஷா அவத் பிராந்தியத்தில் கிளர்ச்சியின் கலங்கரை விளக்கமாக அறியப்பட்டார். ஜார்ஜ் புரூஸ் மல்லேசன் மற்றும் தாமஸ் சீடன் போன்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் அகமதுல்லாவின் தைரியம், வீரம், தனிப்பட்ட மற்றும் நிறுவனத் திறன்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஜிபி மல்லேசன் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியை உள்ளடக்கிய 6 தொகுதிகளில் எழுதப்பட்ட இந்தியக் கலகத்தின் வரலாறு என்ற புத்தகத்தில் அகமதுல்லாவை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். தாமஸ் சீடன் அகமதுல்லா ஷாவை இவ்வாறு விவரிக்கிறார்:

சிறந்த திறமைகள், அசாத்திய துணிச்சல், கடுமையான மன உறுதி, மற்றும் கிளர்ச்சியாளர்களில் மிகச் சிறந்த சிப்பாய்.

— தாமஸ் சீடன்,

ஒரு முஸ்லிம் மதத்தை பின்பற்றுபவராக இருந்த அவர், பைசாபாத்தின் மத ஒற்றுமை மற்றும் கங்கா-ஜமுனா கலாச்சாரத்தின் சுருக்கமாகவும் இருந்தார் . 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியில், நானா சாஹிப் மற்றும் கான் பகதூர் கான் போன்ற அரச குடும்பத்தினர் அகமதுல்லாவுடன் இணைந்து போராடினர்.

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. அவரைப் பிடிக்க 50,000 வெள்ளி நாணயங்கள் விலை அறிவிக்கப்பட்டது. இறுதியாக போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங் மௌல்வியைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அவரது தலையை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார், இதற்காக ராஜா ஜகன்னாதிற்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது. அடுத்த நாள், மௌல்வியின் தலை கோத்வாலியில் தொங்கவிடப்பட்டது காணப்பட்டது.



## குடும்பம்

அஹ்மதுல்லாவின் குடும்பம் ஹர்தோய் மாவட்டத்தில் உள்ள கோபமாவ் கிராமத்தின் பூர்வீக குடியிருப்பாளர் . அவரது தந்தை குலாம் உசேன் கான் சுல்தான் ஹைதர் அலியின் மைசூர் படையில் ஒரு இராணுவத் தளபதியாக இருந்தார் . ஜிபி மல்லேசன் மௌல்வியின் ஆளுமையை பின்வருமாறு விவரிக்கிறார்:

அந்த மௌல்வி ஒரு குறிப்பிடத்தக்க மனிதர். அவரது பெயர் அஹ்மத்-உல்லா மற்றும் அவரது சொந்த ஊர் அவுத்தில் உள்ள பைசாபாத். நேரில் பார்த்தால், அவர் உயரமானவர், ஒல்லியானவர் மற்றும் தசைநார் கொண்டவர், பெரிய ஆழமான கண்கள், வண்டு புருவங்கள், உயர்ந்த நீர்வாழ் மூக்கு மற்றும் லாந்தர் தாடைகள் கொண்டவர்.
மௌல்வி ஒரு சுன்னி முஸ்லிம் மற்றும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியைப் பெற்ற பிறகு , மௌல்விக்கு பொதுநலப் பயிற்சியும் வழங்கப்பட்டது. அவர் இங்கிலாந்து , ரஷ்யா , ஈரான் , ஈராக் , மெக்கா மற்றும் மதீனா ஆகிய நாடுகளுக்குச் சென்று ஹஜ்ஜையும் செய்தார்.
1857 கிளர்ச்சிக்கு முன்பு ஆயுதமேந்திய கிளர்ச்சியின் வெற்றிக்கு, மக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று மௌல்வி அகமதுல்லா ஷா நம்பினார். அவர் டெல்லி , மீரட் , பாட்னா , கல்கத்தா மற்றும் பல இடங்களுக்குச் சென்று சுதந்திர விதைகளை விதைத்தார். மௌல்வி மற்றும் ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி ஆகியோரும் பிரிட்டன்களுக்கு எதிராக ஜிஹாத் அறிவித்தனர் .
1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி வெடிப்பதற்கு முன்பே, ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஜிஹாத் தேவைக்காக திட்டமிடப்பட்ட முறையில் ஃபதே இஸ்லாம் என்ற துண்டுப்பிரசுரத்தையும் அவர் எழுதினார் .

ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, "1857 கிளர்ச்சியின் சதித்திட்டத்திற்குப் பின்னால், மௌலவியின் மூளையும் முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை என்பதில் சந்தேகமில்லை. பிரச்சாரங்களின் போது ரொட்டி விநியோகம், சப்பாத்தி இயக்கம் , உண்மையில் அவரது மூளையில் பிறந்தது."

பாட்னாவில் கைது

ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, மௌல்வி பாட்னாவில் இருந்தபோது, திடீரென எந்த முன்னறிவிப்பும் அல்லது தகவலும் இல்லாமல், பஞ்சாபிலிருந்து ஒரு அதிகாரி பாட்னாவிற்கு வந்தார் . ரஷ்மி குமாரி எழுதிய அகமதுல்லா ஷா பற்றிய புத்தகத்தில் அவர் லெப்டினன்ட் தர்ஸ்பெர்ன் என்று குறிப்பிடப்படுகிறார். தனது சட்டைப் பையில் ஒரு வாரண்டுடன், பாட்னாவில் உள்ள சாதிக்பூருக்குள் நுழைந்தார் . அவர் அகமதுல்லா ஷாவின் வீட்டிற்குள் நுழைந்து, காவல்துறையின் உதவியுடன் அவரைக் கைது செய்தார்.
பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் சதித்திட்டக் குற்றச்சாட்டில் மௌல்விக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது . பின்னர் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
1857 மே 10 அன்று கிளர்ச்சி வெடித்த பிறகு, அசாம்கர் , பனாரஸ் மற்றும் ஜான்பூரிலிருந்து கிளர்ச்சி சிப்பாய்கள் ஜூன் 7 அன்று பாட்னாவை அடைந்தனர். ஏற்கனவே தப்பி ஓடிய ஆங்கில அதிகாரிகளின் பங்களாக்களைத் தாக்கினர். நகரத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியவுடன், அவர்கள் அரசாங்க கருவூலத்தைக் கைப்பற்றினர். அவர்கள் சிறைச்சாலையை நோக்கிச் சென்று மௌல்வியையும் மற்ற கைதிகளையும் விடுவித்தனர். மான் சிங்கை பாட்னாவின் ராஜாவாக அறிவித்த பிறகு , மௌல்வி அகமதுல்லா அவத் சென்றார் .

கிளர்ச்சியாளர்களின் ஒரு படைப்பிரிவுக்கும் ஜெனரல் பிரிகேடியர் ஜோன்ஸின் படைப்பிரிவுக்கும் இடையே 1858 மே 15 அன்று கடுமையான போர் நடந்தது. இரு தரப்பினரும் பெரும் இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது, ஆனால் கிளர்ச்சியாளர்கள் ஷாஜஹான்பூரைக் கைப்பற்ற முடிந்தது. காலின் மே 20 அன்று ஷாஜஹான்பூரை அடைந்து, அனைத்துப் பக்கங்களிலிருந்தும் தாக்கினார். இந்தப் போர் இரவு முழுவதும் தொடர்ந்தது. மௌலவியும் நானா சாஹிப்பும் ஷாஜஹான்பூரை விட்டு வெளியேறினர். காலின் தானே மௌலவியைப் பின்தொடர்ந்தார், ஆனால் அவரைப் பிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. ஷாஜஹான்பூரின் வீழ்ச்சிக்குப் பிறகு, மௌலவி ஷாஜஹான்பூருக்கு வடக்கே 18 மைல் தொலைவில் உள்ள போவயனுக்குப் புறப்பட்டார்.

## இறப்பு

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. மௌல்வியைப் பிடிக்க 50,000 வெள்ளித் துண்டுகளை பரிசாக அறிவித்தனர். பவாயன் மன்னர் ராஜா ஜெகன்னாத் சிங்கை ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்ட மௌல்வி அகமதுல்லா ஷா விரும்பினார், ஆனால் மௌல்வியின் விருப்பத்திற்கு மௌல்வி அடிபணியவில்லை. மௌல்வி தனது போர் யானையின் மீது தனது அரண்மனையின் வாயிலை அடைந்தபோது , மன்னர் பீரங்கி குண்டு வீசி அவரைத் தாக்கினார் . இதனால் மௌல்வி தனது யானையிலிருந்து கீழே விழுந்து இறந்தார். ஜிபி மல்லேசன் அவரது மரணத்தை இவ்வாறு விவரிக்கிறார்:

இவ்வாறு பைசாபாத்தின் மௌல்வி அகமதுல்லா ஷா இறந்தார். ஒரு தேசபக்தர் தனது சொந்த நாட்டிற்காக சுதந்திரத்திற்காக சதி செய்து போராடி, தவறாக அழிக்கப்பட்ட ஒரு மனிதராக இருந்தால், நிச்சயமாக, மௌல்வி ஒரு உண்மையான தேசபக்தர் ஆவார்.

— ஜிபி மல்லேசன்

போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங்கின் சகோதரர் குன்வர் பல்தியோ சிங், மௌல்வி அகமதுல்லா ஷாவைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அதை நீதிபதியிடம் ஒப்படைத்ததாக அறியப்படுகிறது . அவருக்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதரவைப் பெற்றார். மௌல்வியின் தலை மறுநாள் கோட்வாலியில் தூக்கிலிடப்பட்டது. 1857 ஆம் ஆண்டின் மற்றொரு புரட்சியாளரான ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி, மௌல்வியின் மரணத்தைக் கண்டார்.

# மேற்கு வங்காள ஆளுநர் ஆனந்த போஸ் திடீர் ராஜினாமா



கொல்கத்தா, மார்ச் 7:

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்து வருகிறது.

இன்னும் ஒரு மாதத்தில் மேற்கு வங்காளத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த சூழலில், மேற்கு வங்காள ஆளுநர் ஆனந்த போஸ் தனது பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி உள்ளதாக மேற்கு வங்க ஆளுநர் மாளிகை தெரிவித்துள்ளது. போதிய காலம் பதவியில் இருந்துவிட்டேன். ஆளுநர் அலுவலகத்தில் போதுமான நேரத்தை செலவிட்டுள்ளேன் என ஆனந்த போஸ் கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதல்-மந்திரி மம்தா பானர்ஜிக்கு எதிராக 2024-லில் மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருந்தார் ஆனந்த போஸ். சட்டசபையில் நிறைவேற்றிய சில மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காததால் சர்ச்சைக்குள்ளானவர்.

நாளை மேற்கு வங்காளத்திற்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு செல்லும் நிலையில் ஆளுநர் ராஜினாமா செய்துள்ளது மேற்கு வங்காளத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேற்கு வங்காளத்தில் ஆளுநருக்கும், முதல்-மந்திரி மம்தா பானர்ஜிக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் எல்.பி.ஜி., எல்.என்.ஜி தட்டுப்பாடு இல்லை – மத்திய அரசு விளக்கம்



புதுடெல்லி, மார்ச் 7:

இந்தியா தற்போது 195 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்ட் கியூபிக் மீட்டர் (MMSCMD) எரிவாயுவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. அவற்றில் சுமார் 60 மில்லியன் எம்எம்எஸ்சிஎஸ்டி அளவிலான எரிவாயுவை கத்தார் நாட்டிலிருந்து இந்தியா வாங்குகிறது.

இந்த நிலையில், மேற்கு ஆசியாவில் மோதல் அதிகரித்து வரும் சூழலில் எரிசக்தி ஆதாரங்களுக்காக பிற நாடுகளை இந்தியா ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) திரவாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) தட்டுப்பாடு இல்லை.

போதுமான அளவு எல்.பி.ஜி இருப்பில் உள்ளது. தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படுகிறது. 25 நாட்களுக்கான மூலப்பொருட்கள் என 50 நாட்களுக்கு இருப்பு உள்ளது. சரிசக்தியின் இருப்பு குறித்து தினமும் 2 முறை ஆய்வு செய்யப்படுகிறது.

வளைகுடா நாடுகள் தவிர பிற நாடுகள் தவிர பிற நாடுகளிடமும் கச்சா எண்ணெய் வாங்க பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. கத்தார் நாட்டுக்கு மாற்றாக மற்ற நாடுகளில் இருந்து எரிவாயு வாங்க இந்தியா முயன்று வருகிறது. இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகள் எரிவாயு விற்பனை செய்ய முன்வந்துள்ளன. சர்வதேச எரிசக்தி முகமை, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்புடன் இந்தியா தொடர்பில் உள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ரூ.20,000 கோடி மதிப்பிலான அரசு பத்திரங்கள் மாற்றம்: மார்ச் 9-இல் 'ஸ்விட்ச்' ஏலம் - ரிசர்வ் வங்கி

புதுடெல்லி, மார்ச் 7:

மத்திய அரசின் கடன் சுமையைச் சீரமைக்கும் நோக்கில், ரூ.20,000 கோடி மதிப்பிலான அரசுப் பத்திரங்களை நீண்ட காலப் பத்திரங்களாக மாற்றும் 'ஸ்விட்ச்' ஏலத்தை திங்கள்கிழமை (மார்ச் 9) நடத்தவுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இந்த ஏலம் திங்கள்கிழமை காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை நடைபெறும். ஏலத்தின் முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட்டு, செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஸ்விட்ச் செயல்பாடு அடுத்த நிதியாண்டில் நிதிநெருக்கடி, கடன் முதிர்வு அழுத்தத்தை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் அடுத்த நிதியாண்டில் மத்திய அரசு சுமார் ரூ.5.47 லட்சம் கோடி மதிப்பிலான பத்திரங்களை முதிர்வுக் காலத்துக்குப் பிறகு திரும்பச் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் குறுகிய காலத்தில் முதிர்வடையவுள்ள பத்திரங்களுக்குப் பதிலாக, நீண்ட கால முதிர்வு கொண்ட புதிய பத்திரங்களை முதலீட்டாளர்களுக்கு ரிசர்வ் வங்கி வழங்குகிறது. இதன்மூலம், அரசின் உடனடி நிதித் தேவை மேலாண்மை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு பிப்ரவரி மாதத்திலிருந்து, ரிசர்வ் வங்கி அறிவிக்கும் நான்காவது 'ஸ்விட்ச்' ஏலம் இதுவாகும். இதற்கு முன்னதாக நடத்தப்பட்ட மூன்று ஸ்விட்ச் ஏலத்தின் மூலம் ரூ.98,591.70 கோடி மதிப்பிலான பத்திரங்கள் வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளன என ரிசர்வ் வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன. புழக்கத்தில் உள்ள ரூ.2000 நோட்டுகளில் 98.44% சதவிகிதம் வங்கி அமைப்புக்கு திரும்பி வந்துவிட்டதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

# சத்தீஸ்கரில் நக்ஸல் தீவிரவாதி சுட்டுக் கொலை : ரூ.5 லட்சம் வெகுமதியுடன் தேடப்பட்டவர்

புதுடெல்லி, மார்ச் 7:

சத்தீஸ்கரின் தந்தேவாடா மாவட்ட வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் நக்ஸல் தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைப் பற்றி தகவல் தருவோருக்கு ரூ.5 லட்சம் வெகுமதி அறிவித்து காவல் துறையினர் தேடி வந்த நிலையில், தற்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தந்தேவாடா காவல் துறைக் கண்காணிப்பாளர் கௌரவ் ராய் வியாழக்கிழமை கூறியதாவது: கீதாம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட அடர் வனப் பகுதியில் குமல்நார், கிர்சாபரா, நெல்கோடா ஆகிய கிராமங்களுக்கு இடையே நக்ஸல்களால் ஆயுதங்கள் மற்றும் பிற பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக ரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது. இதையடுத்து, காவல் துறையின் மாவட்ட ரிசர்வ் படையினர் மற்றும் பஸ்தர் ஃபைட்டர் படையினர் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். கடந்த புதன்கிழமை இரவில் வனப் பகுதியில் பதுங்கியிருந்த நக்ஸல்கள், பாதுகாப்புப் படையினரை நோக்கி திடீரென துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டதால், கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது. அப்போது, இருட்டை சாதகமாகப் பயன்படுத்தி, பல நக்ஸல் தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் ஒரு நக்ஸல் தீவிரவாதியின் உடல் கைப்பற்றப்பட்டது. அவரிடமிருந்து தானியங்கி துப்பாக்கி, இன்சாஸ் ரக துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வாக்கிடாக்கி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது என்றார் கௌரவ் ராய்.

# மத்திய கிழக்கில் பதற்றம்: இந்தியாவில் இருந்து புறப்படவிருந்த 281 விமானங்கள் ரத்து

புதுடெல்லி, மார்ச் 7:

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா கடந்த 28ம் தேதி அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. மேலும், பல்வேறு நாடுகள் தங்கள் வான்பரப்பை மூடியுள்ளன.

இந்நிலையில், மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தால் வளைகுடா நாடுகளுக்கான விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர். பல்வேறு வளைகுடா நாடுகள் தங்கள் வான்பரப்பை மூடியுள்ளதால் இந்தியாவில் இருந்து மத்திய கிழக்கு செல்லும் பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, இந்தியாவில் இருந்து நேற்று மத்திய கிழக்கு வளைகுடா நாடுகள் உள்பட பல்வேறு நாடுகளுக்கு புறப்படவிருந்த 281 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர்.

# சுகோய் போர் விமானம் விபத்து.. விமானப்படை வீரர்கள் இருவர் பலி



கவுகாத்தி, மார்ச் 7:

ரஷிய தயாரிப்பான சுகோய் சூ 30 போர் விமானம், இந்திய விமானப்படையில் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த சுகோய் சூ 30 ரக விமானங்கள் 1997-ல் இந்தியாவிடம் ரஷியா ஒப்படைத்தது. 250 விமானங்கள் இந்திய விமானப்படையில் உள்ள நிலையில், தற்போது அதனை இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் தயாரித்து வருகிறது.

அசாம் மாநிலம் கர்பி அங்லாங் மாவட்டம் ஜோர்ஹட் விமான தளத்தில் இருந்து சுகோய்-30 ரக போர் விமானம் நேற்று புறப்பட்டது. அந்த விமானம் இரவு 7.42 மணியளவில் ரேடார் தொடர்பிலிருந்து காணாமல் போனதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். காணாமல் போன போர் விமானத்தை தேடும் பணி மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பயிற்சிப் பணியில் ஈடுபட்டிருந்த விமானம், ஜோர்ஹட்டிலிருந்து சுமார் 60 கி.மீ தொலைவில் உள்ள அசாமின் கர்பி அங்லாங் பகுதியில் விபத்துக்குள்ளானது என்று விமானபடை தெரிவித்தது. இந்த நிலையில், அசாமில் ஏற்பட்ட விபத்தில் விமானப்படை வீரர்கள் இருவர் உயிரிழந்ததாக இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

இது குறித்து விமானப்படை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "சுகோய் சூ 30 விபத்தில் படுகாயமடைந்த ஸ்கொட்ரன் லீடர் அனுஜ் மற்றும் விமான லெப்டினன்ட் பூர்வேஷ் துரக்கர் ஆகியோரின் இழப்பை இந்திய விமானப்படை ஒப்புக்கொள்கிறது. இந்திய விமானப்படையின் அனைத்து பணியாளர்களும் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறார்கள், மேலும் இந்த துயரமான நேரத்தில் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருடன் உறுதியாக நிற்கிறார்கள்" என தெரிவித்துள்ளது.

# பிகார் மக்களுக்கு நிதீஷ் குமார் நம்பிக்கைத் துரோகம்: காங்கிரஸ், ஆர்ஜேடி குற்றச்சாட்டு

பாட்னா, மார்ச் 7:

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'பிகார் சட்டப்பேரவைத் தேர்தலின்போது நாங்கள் திரும்பத் திரும்ப இதைத்தான் (முதல்வர் பதவியில் நிதீஷ் குமார் இருக்க மாட்டார்) கூறினோம். அதுதான் தற்போது நடக்கிறது. திட்டமிடப்பட்ட தலைமை மாற்றம், ஆட்சி மாற்றம் ஆகியவை அரங்கேறுகின்றன. இது பல வழிகளில், மக்கள் தீர்ப்புக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆர்ஜேடி கட்சித் தலைவரும், பிகார் முன்னாள் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவும், நிதீஷ் குமாரின் முடிவை சாடியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: தேர்தலுக்குப் பிறகு நிதீஷ் குமாரை முதல்வர் பதவியில் அமர பாஜக விடாது என நாங்கள் முதலில் இருந்தே தெரிவித்தோம். அதுதான் தற்போது நடக்கிறது. இது மக்கள் தீர்ப்புக்கு எதிரானது. மேலும் இதுவொரு நம்பிக்கைத் துரோகம் ஆகும். அத்துடன் ஓபிசி, தலித்துகளுக்கு எதிரானது பாஜக. மிகப்பெரிய பதவியில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அமருவதை பாஜக விரும்பாது. பாஜக தலைமை சொல்வதை கேட்டு நடக்கும் ரப்பர் ஸ்டாம்ப் போல செயல்படும் ஒருவரே முதல்வர் பதவியில் இருப்பதை அவர்கள் விரும்புவார்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

# அல்-காய்தா, ஐஎஸ் அமைப்புகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை: ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தல்



புதுடெல்லி, மார்ச் 7:

அல்-காய்தா, ஐஎஸ் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபையில், பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பான உறுப்பு நாடுகளின் தூதர்கள் இடையேயான கூட்டம் நடைபெற்றது. இதில் ஐ.நா.வுக்கான இந்திய தூதரகத்தின் முதன்மைச் செயலர் ரகு புரி பேசியதாவது:

ஜம்மு -காஷ்மீரின் பஹல்காமில் 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரெசிஸ்டன்ஸ் ஃபிரன்ட் என்ற பயங்கரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது. இது ஐ.நா.வால் தடை செய்யப்பட்ட லஷ்கர்-ஏ-தொய்பாவின் கிளை அமைப்பாகும். இந்த அமைப்பு பாகிஸ்தானில் இருந்து செயல்படுகிறது. இந்தத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

இதுபோன்று எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா 30 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அல்-காய்தா, ஐஎஸ் ஆகியவற்றின் மீதும், அதன் கிளை அமைப்புகள் மீதும் அனைத்து நாடுகளும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச அமைதி, பாதுகாப்புக்கு பயங்கரவாதத்தால் அச்சுறுத்தல் நிலவுகிறது. பயங்கரவாதத்துக்கு எல்லைகளோ, தேசியமோ அல்லது இனமோ கிடையாது. அது சர்வதேச சமூகத்துக்கு சவாலாக உருவெடுத்துள்ளது. அதை அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும் என்றார்.

# ரஷியாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்..? காங்கிரஸ் கேள்வி

புதுடெல்லி, மார்ச் 7:

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல் பாதைகளை ஈரான் தடுத்துள்ள நிலையில், இந்தியா தனது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதற்கு அமெரிக்கா 30 நாட்கள் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க நிதித்துறை செயலாளர் ஸ்காட் பெசென்ட் கூறுகையில், "ஜனாதிபதி டிரம்பின் எரிசக்தி நிகழ்ச்சி நிரலின் விளைவாக எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி இதுவரை பதிவு செய்யப்படாத மிக உயர்ந்த அளவை எட்டியுள்ளது. உலக சந்தையில் எண்ணெய் தொடர்ந்து பாய உதவும் வகையில், இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷிய எண்ணெயை வாங்குவதற்கு நிதித்துறை தற்காலிகமாக 30 நாட்களுக்கு அனுமதி அளிக்கிறது. இந்த குறுகிய கால நடவடிக்கை ரஷிய அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க நிதி நன்மையை வழங்காது, ஏனெனில் அது ஏற்கனவே கடலில் சிக்கித் தவிக்கும் எண்ணெய் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளை மட்டுமே அங்கீகரிக்கிறது. இந்தியா அமெரிக்காவின் முக்கியமான பங்காளியாகும், மேலும் அமெரிக்க எண்ணெய் கொள்முதலை இந்தியா அதிகரிக்கும் என்று நாங்கள் முழுமையாக எதிர்பார்க்கிறோம். இந்த இடைநிறுத்த நடவடிக்கை உலகளாவிய எரிசக்தி பணயக்கைதியாக ஈரானின் முயற்சியால் ஏற்படும் அழுத்தத்தை தணிக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்..? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:- இந்த உத்தரவை அமெரிக்க நிதித்துறை செயலாளர் ஸ்காட் பெசென்ட் ஒரு பதிவில் பகிர்ந்துள்ளார். நரேந்திர மோடியின் கீழ் உள்ள இந்திய அரசாங்கம், இந்தியா எங்கிருந்து எண்ணெய் வாங்கலாம், எங்கிருந்து வாங்கக்கூடாது என்பதை அமெரிக்கா இப்போது தீர்மானிக்கும் சூழ்நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளது. இந்த முடிவை பிரதமர் மோடியோ அல்லது இந்திய அரசாங்கமோ எடுக்கவில்லை. இன்று, நாட்டின் குடிமக்கள் கேட்கிறார்கள். இந்தியா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்?

நாங்கள் எந்த நாட்டிற்கும் அடிமைகள் அல்ல; நாங்கள் ஒரு இறையாண்மை மற்றும் சுதந்திரமான நாடு. ஆனால் நரேந்திர மோடி அமெரிக்காவிடம் இந்தக் கேள்வியைக் கேட்க முடியாது, ஏனென்றால் அவர் முற்றிலும் சமரசம் செய்து, அமெரிக்க நலன்களுக்கு நாட்டை அடமானம் வைத்துள்ளார். இது வெட்கக்கேடானது!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டில்லி காவல் துறையின் குற்ற ஆவண பிரிவுக்கு ஐஎஸ்ஓ தரச் சான்றிதழ்

புதுடெல்லி, மார்ச் 7:

குற்றச் சம்பவங்கள் குறித்த தரவுகளை எண்ம (டிஜிட்டல்) முறையில் நிர்வகிப்பதற்காக தில்லி காவல் துறை குற்றப் பிரிவின் குற்ற ஆவண பிரிவுக்கு (எஸ்சிஆர்பி) இந்திய தர ஆணையம் (பிஐஎஸ்) ஐஎஸ்ஓ சான்றிதழ் வழங்கியுள்ளது. வாகனம் மற்றும் சொத்து திருட்டு சம்பவங்களுக்கு இ-எஃப்ஐஆர் பதிவு செய்தல், இ-என்சிஆர், பூஜ்ய சைபர் வழக்கு ஆகியவற்றை இணையவழியில் பதிவுசெய்தல், குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் அமைப்பை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக குற்ற ஆவண பிரிவுக்கு 9001:2015 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தரவு தரத்தை பராமரித்தல், மாவட்ட காவல் துறை அலகுகள் மற்றும் காவல் நிலையங்களுடன் இணைந்து பணியாற்றுதல், தொடர் பயிற்சிகள் அளித்தல், திறன் மேம்பாடு முன்னெடுப்புகளை தில்லி குற்ற ஆவண காப்பக பிரிவு மேற்கொண்டு வருகிறது.

# ஈரான் போர்க் கப்பல் மூழ்கியபோது மீட்புப் பணியில் ஈடுபட்ட இந்திய கடற்படை

புதுடெல்லி, மார்ச் 7:

இந்திய கடற்படை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 4ம் தேதி அதிகாலை ஈரான் போர்க் கப்பல் ஐஆர்ஐஎஸ் டேனாவில் இருந்து அவசர உதவி கோரி கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இலங்கையின் காலே பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் ஈரான் போர்க்கப்பல் கடலில் மூழ்கியது. இது இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதி ஆகும்.

இந்திய கடற்படைக்கு தகவல் கிடைத்ததும் உடனடியாக மீட்புப் பணியில் களமிறங்கினோம்.

ஐஎன்எஸ் தரங்கிணி கப்பல் சம்பவ பகுதிக்கு அனுப்பப்பட்டது.

கொச்சியில் இருந்து ஐஎன்எஸ் இக்சாக் கப்பலும் சம்பவ பகுதிக்கு சென்றது.

இலங்கை கடற்படையோடு இணைந்து இந்திய கடற்படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டது. இந்திய கடற்படையின் கண்காணிப்பு விமானம் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்று உயிர் காக்கும் ஜாக்கெட்டுகளை வீசியது.

இலங்கையோடு இணைந்து தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.




# போதையில் குப்பை தொட்டியை எட்டி உதைத்ததால் தகராறு: அமமுக பிரமுகர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய 4 பேர் கைது

சென்னை, மார்ச் 7: அமமுக பிரமுகர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய 4 பேர் கைது செய்யப்பட்டனர். வியாசர்பாடி, இந்திராகாந்தி நகர் மெயின் தெருவில் வசிப்பவர் பாலமுருகன் (47).

அமமுக நிர்வாகி. இவர் எண்ணெய் வியாபாரம் செய்து வருவதோடு, அத்தோ கடையும் நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு அத்தோ கடையை மூடிவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது, அந்த வழியாக வந்த போதை கும்பல் ஒன்று ஹெல்மெட்டால் சாலையோரம் நின்றிருந்த வாகனங்களை சேதப்படுத்தியவாறும், கூச்சலிட்டவாறும் சென்றுள்ளது. மேலும், பாலமுருகன் வீட்டின் முன் வைக்கப்பட்டிருந்த குப்பை தொட்டியை எட்டி உதைத்துள்ளது.

இதை அவரது குடும்பத்தினர் தட்டிக் கேட்டுள்ளனர். இதனால் தகராறு ஏற்பட்டுள்ளது. பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து சென்றுவிட்டது. இந்நிலையில், நேற்று அதிகாலை 3.35 மணியளவில் இருசக்கர வாகனங்களில் வந்த அதே கும்பல் அடுத்தடுத்து பாலமுருகன் வீட்டு வளாகத்துக்குள் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பியது.

பெட்ரோல் குண்டுகள் வீட்டின் முன்பும், முதல் மாடியின் பால்கனி மீதும் விழுந்து தீப்பற்றி எரிந்தது. கண் விழித்து எழுந்த பாலமுருகன், உடனடியாக தீயை அணைத்து விட்டு போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து, எம்கேபி நகர் போலீஸார் சம்பவ இடம் விரைந்து, சிசிடிவி கேமரா காட்சிகளைக் கைப்பற்றி விசாரித்தனர்.

இதில் பெட்ரோல் குண்டுகளை வீசியதாக தனுஷ்ராஜ், மோனிஷ்ராஜ், ஸ்டீபன், சந்தோஷ் குமார் ஆகிய 4 பேரை கைது செய்தனர். இவர்கள் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள், இவர்களின் பின்னணி என்ன என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

# மானாமதுரை அருகே ஊருக்குள் புகுந்து 4 பேரை வாளால் வெட்டிய 5 பேர் கைது



மானாமதுரை, மார்ச் 7: மானாமதுரை அருகே ஊருக்குள் புகுந்து பட்டியலினத்தைச் சேர்ந்த 4 பேரை வாளால் வெட்டிய 5 பேரை போலீஸார் கைது செய்தனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே இடைக்காட்டூரைச் சேர்ந்த பெயின்டர் ராஜூ (32).

பட்டியலினத்தைச் சேர்ந்த இவர், மார்ச் 3-ம் தேதி பிற்பகல் அங்குள்ள கடைவீதியில் நின்று கொண்டிருந்தார். அங்கு செட்டிக்குளத்தைச் சேர்ந்த பாண்டியராஜனுக்கும், வே.புதுக்குளத்தைச் சேர்ந்த மகேஸ்வரனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

தொடர்ந்து ராஜூவிடமும் மகேஸ்வரன் தகராறு செய்தார். பின்னர் அங்கிருந்து மூவரும் தங்களின் வீட்டுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், ஆத்திரத்தில் இருந்த மகேஸ்வரன் அன்று இரவு, தனது நண்பர்கள் 8 பேருடன் 3 இருசக்கர வாகனத்தில் வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் இடைக்காட்டூரில் ராஜூ வசிக்கும் குடியிருப்புக்குள் புகுந்தார்.

பின்னர் ராஜூவை வாளால் அந்த கும்பல் வெட்டியது. தடுக்க வந்த ராஜூவின் உறவினர்கள் தினேஷ், ராஜேந்திரன், சுப்பிரமணி ஆகியோரையும் தாக்கியது. பின்னர், செட்டிக்குளம் சென்று, பாண்டியராஜனின் வீட்டையும் அக்கும்பல் அடித்து நொறுக்கியது.

காயமடைந்த ராஜூ உள்ளிட் 4 பேரும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சிகிச்சை முடிந்து மற்றவர்கள் வீடுகளுக்கு திரும்பிய நிலையில், ராஜூ தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து மானாமதுரை போலீஸார் வழக்கு பதிந்தனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் விசாரணை நடத்தினார். இச்சம்பவம் தொடர்பாக வி.புதுக்குளத்தைச் சேர்ந்த இருளப்பன் (31), பாலமுருகன் (22), வேல்முருகன் (20), வேம்பத்தூரைச் சேர்ந்த பாரதி (19) மற்றும் ஒரு சிறுவன் ஆகிய 5 பேரை போலீஸார் கைது செய்தனர்.

இதுகுறித்து காயமடைந்த ராஜூ கூறியதாவது: நான் கடைவீதியில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த 2 பேர் என்னிடம் சாதியை கேட்டனர். சாதியை கூறியதும், திடீரென என்னை தாக்கினர். பின்னர் அங்கிருந்து வீட்டுக்கு வந்துவிட்டேன்.

சிறிது நேரத்தில் எங்களது குடியிருப்புக்குள் புகுந்த 9 பேர் என்னையும், எனது அண்ணன் உள்ளிட்டோரையும் வெட்டி விட்டு தப்பினர். உடனே போலீஸாரை அழைத்தும், அவர்கள் தாமதமாகத்தான் வந்தனர். முறையாக விசாரிக்கவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

காயமடைந்த ராஜேந்திரன் கூறுகையில், ‘போலீஸார் முறையாக விசாரிக்கவில்லை. மேலும், அங்கிருந்த சிசிடிவி காட்சிகளை அழிக்க சொல்லி மிரட்டினர்.

இன்று (நேற்று) சிசிடிவி காட்சி சமூக ஊடகங்களில் வெளியான பிறகு தான் எங்களை தாக்கிய சிலரை கைது செய்துள்ளனர்’ என்றார். இச்சம்பவத்தை பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டித்து உள்ளனர்.

சாதிய மோதல் அல்ல: எஸ்பி விளக்கம்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் கூறுகையில், செட்டிக்குளத்தைச் சேர்ந்த பாண்டியராஜன், புதுக்குளத்தைச் சேர்ந்த மகேஸ்வரனுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. அங்கிருந்த ராஜூ இருவரையும் கண்டித்து அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ந்து ஆத்திரத்தில் இருந்த மகேஸ்வரன் தனது நண்பர்களுடன் சேர்ந்து இடைக்காட்டூரில் ராஜூவையும், அவரது உறவினர்களையும் தாக்கியுள்ளார். பின்னர் பாண்டியராஜன் வீட்டை அடித்து நொறுக்கியுள்ளனர்.

இச்சம்பவம் அவர்களுக்குள் ஏற்பட்ட வாய் தகராறில் ஏற்பட்டது தான். சாதிய மோதல் இல்லை. தாக்கியதாக ராஜூ கொடுத்த புகாரில் ஒரு வழக்கும், வீட்டை நொறுக்கியதாக பாண்டியராஜன் மனைவி கொடுத்த புகாரில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 5 பேரை கைது செய்துள்ளோம். மற்ற 4 பேரும் விரைவில் கைது செய்யப்படுவர். இவ்வாறு அவர் கூறினார்.

# தஞ்சாவூர் பெரிய கோவிலில் சித்திரை பெருவிழாவிற்கான பந்தல்கால் முகூர்த்தம் நடைபெற்றது



தஞ்சாவூர், மார்ச் 7: தஞ்சாவூர் பெரிய கோவில் உலக புகழ் பெற்றது. தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலம், வெளிநாடுகளில் இருந்தும் தினமும் ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் பெரிய கோவிலுக்கு வந்து செல்கின்றனர்.

பல்வேறு சிறப்புகள் வாய்ந்த தஞ்சாவூர் பெரிய கோவிலில், ஆண்டுதோறும் சதயவிழா, ஆஷாட நவராத்திரி விழா, சித்திரை பெருவிழா என பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதில் சித்திரை பெருவிழா 18 நாட்கள் நடைபெறும்.

இந்த ஆண்டுக்கான சித்திரை பெருவிழாவுக்கான பந்தக்கால் முகூர்த்தம் இன்று காலை நடைபெற்றது. இதனை முன்னிட்டு பெரியநாயகி அம்மன் சன்னதி வளாகத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பந்தக்காலுக்கு பால், தயிர், மஞ்சள் மற்றும் வாசனை திரவியங்களை கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, பந்தக்கால் நடப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கவிதா, கண்காணிப்பாளர் ரவி, செயல் அலுவலர் சத்யராஜ் மற்றும் பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

சித்திரை பெருவிழாவிற்கான, கொடியேற்றம் அடுத்த மாதம் (ஏப்ரல்) 13-ம் தேதி நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் ஏப்ரல் 27-ந்தேதி நடக்கிறது. 30-ந்தேதி சித்திரை பெருவிழா நிறைவு பெறுகிறது.

# #SpecialTrain திருநள்ளாறு சனிப்பெயர்ச்சியை ஒட்டி விழுப்புரம் - நாகை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம்





காரைக்கால், மார்ச் 7: புதுவை மாநிலம் காரைக்கால் பிராந்தியம் திருநள்ளாறில் உலக பிரசித்திப் பெற்ற தர்ப்பாரண்யேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் சனீஸ்வர பகவான் கிழக்கு நோக்கி தனி சன்னதியில் அருள்பாலித்து வருகிறார். சனிக்கிழமைதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்வது வழக்கம்.

மேலும் சனீஸ்வர பகவான் கோவிலில் 2½ ஆண்டுகளுக்கு ஒரு முறை சனிப்பெயர்ச்சி விழா நடைபெறும். தற்போது நாளை (வெள்ளிக்கிழமை) சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது. இதையொட்டி காலை 8.24 மணிக்கு சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு இடம் பெயர்கிறார்.

நாளை சனிப்பெயர்ச்சி விழா நடைபெற இருப்பதை முன்னிட்டு திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோவிலுக்கு அதிகளவில் பக்தர்கள் வருவார்கள் என்பதால் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி மார்ச் 6, 7 தேதிகளில் விழுப்புரம் - நாகை இடையே சிறப்பு பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகிறது. காலை 9.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் நண்பகல் 1.05 மணிக்கு நாகை சென்றடையும். மறுமார்க்கமாக பகல் 1.20 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் மாலை 5.30 மணிக்கு விழுப்புரம் வந்தடையும்.

# என்னிடமே கேட்கிறாயா... பேருந்தில் டிக்கெட் கேட்ட நடத்துனரை தாக்கிய கல்லூரி மாணவர்



தளி, மார்ச் 7: கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து கல்லுபாலம் கிராமத்திற்கு 43 நம்பர் அரசு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்த பேருந்து நேற்று மாலை தேன்கனிக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்றுள்ளது.

அரசு பேருந்தை வேலன் என்பவர் ஓட்டி சென்று உள்ளார். நடத்துனர் சாமிநாதன் (வயது39) பயணிகளிடம் டிக்கெட் வாங்கி உள்ளார்.

அப்போது தேன்கனிக்கோட்டை பேருந்து நிலையத்தில் அந்த அரசு பேருந்தில் ஏறிய கல்லூரி மாணவர் ஒருவரிடம் நடத்துனர் சாமிநாதன் டிக்கெட் கேட்டு உள்ளார். அதற்கு அந்த மாணவர் டிக்கெட் எடுக்காமல் நின்றுள்ளார்.

பேருந்து தளி சாலையில் அன்னியாளம் கிராமத்தை நோக்கி சென்றபோது மீண்டும் நடத்துனர் அந்த கல்லூரி மாணவரிடம் டிக்கெட் கேட்டுள்ளார். அதற்கு அந்த மாணவர் என்னிடமே டிக்கெட் கேட்கிறாயா எனக்கூறி நடத்துனர் சாமிநாதனை முகத்தில் குத்தியதாக கூறப்படுகிறது.

இதில் அவருக்கு வாய் பகுதியில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. இதனால் இருவருக்கும் இடையே பேருந்தில் தகராறும் ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நடத்துனர் சாமிநாதன் அந்த மாணவரை பேருந்திலேயே மடக்கி பிடித்து, தேன்கனிக்கோட்டை காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

பின்னர் சாமிநாதன் போலீசாரிடம் நடந்த சம்பவத்தை கூறி புகார் அளித்தார். போலீசார் பேருந்து நடத்துனரை தாக்கிய கல்லூரி மாண வரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். காயமடைந்த அரசு பேருந்து நடத்துனர் சாமி நாதன் சிகிச்சைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் அந்த அரசு பேருந்தில் பயணம் செய்த பயணிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போச்சம்பள்ளி அருகே லாரி மோதி பிளஸ்-2 மாணவன் பலி

போச்சம்பள்ளி, மார்ச் 7: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த கொடமாண்டப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சபாபதி. இவரது மனைவி மேனகா. இவர் அதே ஊராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வருகிறார்.

இந்த தம்பதியினருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் இளைய மகன் ஹரிபிரசாத், தற்போது 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை எழுதி வந்தார்.

இந்நிலையில், நேற்றிரவு ஹரிபிரசாத் தனது நண்பருடன் இருசக்கர வாகனத்தில் கொடமாண்டப்பட்டி கூட்ரோடு நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த கனரக லாரி ஒன்று எதிர்பாராதவிதமாக இருசக்கர வாகனத்தின் பக்கவாட்டில் உரசியது.

இதில் நிலைதடுமாறி விழுந்த ஹரிபிரசாத், லாரியின் சக்கரத்தில் சிக்கி தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். உடன் சென்ற நண்பர் சாலையோரம் தூக்கி வீசப்பட்டதில், அவருக்கு கை முறிவு ஏற்பட்டது.

இந்த விபத்து போச்சம்பள்ளி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

விபத்தில் இறந்த ஹரிபிரசாத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக போச்சம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்த இளைஞருக்கு அதே மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேர்வு எழுதி வந்த மாணவன் விபத்தில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# கன்னியாகுமரி மாணவியை ஆபாச வீடியோ காட்டி மிரட்டிய உத்தரப் பிரதேச வாலிபர் கைது

குமரி, மார்ச் 7: குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள காஞ்சிரங்கோடு பகுதியை சேர்ந்த 18 வயது நர்சிங் கல்லூரி மாணவிக்கு, சமூகவலைதளம் மூலமாக உத்தரபிரதேசத்தை சேர்ந்த அஜய் என்ற வாலிபர் அறிமுகமானார்.

அந்த மாணவியிடம், வாலிபர் அஜய் செல்போனில் அடிக்கடி பேசியபடி இருந்துள்ளார். மேலும் மாணவியின் செல்போனுக்கு ஆபாச படங்களை தொடர்ந்து அனுப்பி உள்ளார். அதுமட்டுமின்றி ஆசை வார்த்தைகளை கூறி ஏமாற்றி, மாணவியிடமிருந்து அவரது அந்தரங்க வீடியோக்களை பெற்றுக் கொண்டார்.

அந்த வீடியோக்களை தனது செல்போனில் சேமித்து வைத்துக்கொண்டு, தனது ஆசைக்கு இணங்க வேண்டும் எனவும், இல்லையென்றால் தனக்கு அனுப்பிய அந்தரங்க வீடியோக்களை இன்ஸ்டாகிராமில் குமரி மாவட்ட இளைஞர்களுக்கு அனுப்பி விடுவதாகவும் மாணவியை மிரட்டியுள்ளார்.

அதுமட்டுமின்றி மாணவிக்கு இன்ஸ்டாகிராமில் எஸ்.எம்.எஸ். அனுப்பி தொல்லை கொடுத்தது மட்டுமின்றி, வாட்ஸ்-அப் குரூப் தொடங்கி, அதில் மாணவியின் ஆபாச வீடியோக்களை பதிவிட்டு மிரட்டி வந்துள்ளார்.

இதனால் பயந்த மாணவி, அது குறித்து தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இந்தநிலையில் வாலிபர் அஜய், மாணவியின் தாயிடம் செல்போனில் பேசி 5 லட்சம் ரூபாய் கேட்டுள்ளார்.

பணத்தை தரவில்லை என்றால் மாணவியின் அந்தரங்க வீடியோ மற்றும் புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். அது மட்டுமன்றி மாணவியின் அந்தரங்க புகைப்படங்களை அவரது உறவினருக்கு அனுப்பியிருக்கிறார்.

இதனைத்தொடர்ந்து வாலிபர் அஜய் மீது மார்த்தாண்டம் மகளிர் போலீஸ் நிலையத்தில் மாணவியின் தாய் புகார் செய்தார். அவரது புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர். மேலும் தனிப்படை போலீசார் உத்தரபிரதேசத்துக்கு சென்று வாலிபர் அஜயை கைது செய்தனர்.

பின்பு அங்கிருந்து மார்த்தாண்டத்துக்கு அழைத்து வந்தனர்.

கல்லூரி மாணவி மற்றும் அவரது தாயை மிரட்டிய விவகாரம் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தினர். மேலும் அவரது செல்போனை கைப்பற்றி, அதிலிருக்கும் வீடியோ மற்றும் புகைப்படங்களை ஆய்வு செய்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் ஜூலை 17 முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி



சென்னை, மார்ச் 7: கடந்த 2021-ல் நடத்தப்பட்டிருக்க வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பு கொரோனா தொற்று பரவல் காரணமாக தள்ளிபோனது. இந்நிலையில் மக்கள் தொகை 2027-க்கான பணிகள் ஏப்ரல் 1 முதல் தொடங்க உள்ளன.

இந்த பணிகளை 2 கட்டங்களாக நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக ஏப்ரலில் தொடங்கி செப்டம்பர் வரையில் வீடுகளின் பட்டியல் மற்றம் வீடுகளின் எண்ணிக்கை ஆகியவை கணக்கெடுக்கப்படும்.

இதில் 33 கேள்விகளுக்கு மக்களிடம் இருந்து பதில்கள் பெறப்படும். இதை தொடர்ந்து அடுத்த ஆண்டு பிப்ரவரி முதல் 2-ம் கட்டமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முழுக்க முழுக்க டிஜிட்டல் முறையில் நடத்தப்பட உள்ளன. இதில், 32 லட்சம் அரசு அலுவலர்கள் நாடு முழுவதும் ஈடுபட உள்ளனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் முதல்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் ஜூலை 17-ந்தேதி தொடங்கும் என தமிழ்நாடு அரசு அரசிதழ் வெளியிட்டுள்ளது.

முதல்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் ஜூலை 17 தொடங்கி ஆகஸ்ட் 30-ந்தேதி வரை 45 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

45 நாட்கள் நடைபெறும் மக்கள் தொகைகணக்கெடுப்பில் வீட்டின் நிலை, வசதிகள், சொத்துக்கள், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட 33 கேள்விகள் இடம் பெறும்.

# வாடிப்பட்டி அருகே மின்சாரம் தாக்கி கல்லூரி மாணவன் உள்பட 2 பேர் பலி

வாடிப்பட்டி, மார்ச் 7: மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே தெத்தூர் நாராயணபுரத்தைச் சேர்ந்தவர் ஆதிநாராயணன் (வயது 55). இவர் சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் அரசு பேருந்து ஓட்டுநராக பணி செய்து வந்தார். இவரது தம்பி மகன் ஸ்ரீ என்ற ஸ்ரீ கிருஷ்ணன் (20). இவர் மதுரை தனியார் கல்லூரியில் பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார்.

இந்நிலையில் இன்று காலை 7.45 மணிக்கு இருவரும் தங்களுக்கு சொந்தமான தோட்டத்தில் மாட்டு தீவனம் அறுத்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென காற்று அடித்து அங்கிருந்த மின்வயர் அறுந்து ஸ்ரீ கிருஷ்ணன் மீது விழுந்தது. இதில் அவர் மீது மின்சாரம் பாய்ந்தது. அவரது அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்த ஆதி நாராயணன் மற்றும் அவரது தந்தை சின்னத்தம்பி (79) இருவரும் ஸ்ரீ கிருஷ்ணனை காப்பாற்ற முயற்சி செய்தனர்.

அப்போது இருவர் மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதில் ஆதிநாரயணன் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தார். சின்னதம்பி பலத்த காயமடைந்தார். சம்பவம் குறித்து தகவல் அறிந்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து பலத்த காயம் அடைந்த ஸ்ரீ கிருஷ்ணன், சின்ன தம்பி இருவரையும் வாடிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்தனர்.

அப்போது செல்லும் வழியிலேயே ஸ்ரீ கிருஷ்ணன் பரிதாபமாக உயிரிழந்தார். சின்னத்தம்பி மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து வாடிப்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசன் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்.

மின்சாரம் தாக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்பட்டுள்ளது.

# ஈரான்-இஸ்ரேல் போர் எதிரொலி: கோவை-ஷார்ஜா, அபுதாபி விமானங்கள் ரத்து

கோவை, மார்ச் 7: கோவை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னை, மும்பை, பெங்களூரு, டெல்லி, ஐதராபாத், புனே, கோவா ஆகிய உள்நாட்டு பகுதிகளுக்கும், சிங்கப்பூர், ஷார்ஜா, அபுதாபி ஆகிய வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக கோவையில் இருந்து அபுதாபிக்கு வாரத்தில் 4 நாட்களும், கோவை-ஷார்ஜா இடையே வாரத்தில் 5 நாட்களும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது ஈரான்-இஸ்ரேல் போர் பதட்டம் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளின் வான்வெளி மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கோவையில் இருந்து அபுதாபி மற்றும் ஷார்ஜா இடையேயான விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த 2 விமானங்கள் ரத்து வருகிற 9-ந் தேதி வரை தொடரும் எனவும், இதுகுறித்த மேலும் விபரங்களுக்கு ஏர் அரேபியா விமான பயணிகள், 9087778081 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என கோவை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் திட்டமிட்டபடி பயணம் செய்ய முடியாமல் பயணிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

# அளவுக்கு அதிகமாக மனஅழுத்த மாத்திரைகளை சாப்பிட்ட சென்னை IIT மாணவிக்கு நேர்ந்த விபரீதம்





சென்னை, மார்ச் 7: சென்னை கிண்டியில் உள்ள ஐ.ஐ.டி.யில் அஸ்சாம் மாநிலத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் முதுநிலை பட்டப்படிப்பு 2-ம் ஆண்டு படித்து வருகிறார். இதற்காக அவர், அங்குள்ள விடுதியில் தங்கியுள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் விடுதி அறையில் அந்த மாணவி திடீரென மயங்கி கிடந்தார். இதை கண்ட அவரது தோழிகள் அவரை மீட்டு ஆழ்வார்பேட்டையில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவருக்கு தொடர்ந்துசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து, கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

போலீசார் விசாரணையில், மாணவி ஏற்கனவே மன அழுத்தத்திற்கான மாத்திரை சாப்பிட்டு வருவதும், அதிகமான மாத்திரை சாப்பிட்டதால் மயக்கம் அடைந்ததும் தெரியவந்தது.

இதுகுறித்து, அவரது உறவினருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




திருவல்லிக்கேணி ஸ்ரீ கஜேந்திர வரதர் தவண உற்சவம் முதல் திருநாள் காலை புறப்பாடு திவ்ய சேவை.

# கரூர் ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மகாகும்பாபிஷேக விழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்





கரூர், மார்ச் 7: கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம், எஸ்ஆர்எம் திருமண மண்டபம் கிழக்கில் மாருதி நகரில் அமைந்து உள்ள ஓம் ஶ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக நடைபெற்றது. எங்கும் நீக்கமர நிறைந்து அருள்பாலிக்கும் இறைவன் முருகப்பெருமானின் மூன்றாம் படையாகிய பழனி ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு புதிய ஆலயமாக கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராமம், மாருதி நகரில் அருள்மிகு சர்வ வல்லபை கணபதி. அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி, மத் போகர் சித்தர், அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்தரும் புவனநாயகி உடனாகிய அருள்மிகு புவனநாதர், அருள்மிகு காலபைரவர். அருள்மிகு நவகிரக சுவாமிகள் அருள்மிகு நாக கன்னிகை சுவாமிகள் அமைக்கப்பட்டு ஆலய திருப்பணிகள் சிற்ப சாஸ்த்திர முறைப்படி செவ்வனே செய்து பஞ்சவர்ணங்கள் தீட்டி சிவாகம முறைப்படி நான்கு கால யாக பூஜைகள் நடைபெற்றது.

முன்னதாக கடந்த 4ந்தேதி புலியூர் ஸ்ரீ பகவதி அம்மன் கோவிலில் லிருந்துதீர்த்தம் குடம் புறப்பாடு நிகழ்ச்சியுடன் சிறப்பு கணபதி ஹோமம் முதல் கால யாக பூஜைகள் தொடங்கி தொடர்ந்து வேதபாராயணங்கள், திருமுறை பாராயாணம் மஹா பூர்ணாஹுதி நடைபெற்றது.

மகாகும்பாபிஷேக விழா முன்னிட்டு திருமுருகவள்ளல் வாரியர் சுவாமிகள் மாணவி கலைமாமணி தேச.மங்கையர்க்கரசி அவர்களின் ஆன்மிக சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. யாகத்தில் வைத்து பூஜை செய்து கடங்கள் புறப்பட்டு கோவில் வலம் வந்து விமான கோபுரம் மற்றும் பரிவார கோபுர கலங்களில் புனித தீர்த்தத்தால் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து தண்டாயுதபாணி சுவாமிக்கு மகா அபிஷேகம் தீபாராதனை நடந்தது. மஹா கும்பாபிஷேகம் விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கரூர் ஓம் ஸ்ரீ சுந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் சார்பில் ஸ்தாபகர் நிறுவனத்தலைவர் மடாதிபதி தவதிரு சாந்தானந்த குமர குருபர சுவாமிகள் இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திரு Dr. லோகானந்த குமர குருபர சுவாமிகள் ஓம் ஶ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம்

# மானாமதுரை திருப்புவனம் பகுதியில் கர்ப்பிணி பெண்கள் சமுதாய வளைகாப்பு விழா

## தமிழரசி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்


மானாமதுரை மார்ச் 6 சிவகங்கை மாவட்டம் மானாமதுரை திருப்புவனம் பகுதியில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மானாமதுரை சிவகங்கை ரோட்டில் உள்ள மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் மானாமதுரை எம்எல்ஏ தமிழரசி தனது சொந்த செலவில் புடவைகள் வழங்கி கர்ப்பிணி பெண்களுக்கு மாலை வளையல் அணிவித்து மஞ்சள் குங்குமம் வழங்கினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக நகர் கழக பேரூர் கழக கிளைக் கழக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள் சார்பு அணியினர் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக திருப்புவனம் பகுதியில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



மயிலை ஆதிகேசவர் பந்தக்கால் வைபவம்.





நெல்லூர் தலபகிரி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் சன்னதி பிரம்மோத்ஸவம் ரதோத்ஸவம்.

## அரசியல் கார்னர்

# 172 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் களம் இறங்க தி.மு.க. முடிவு



சென்னை, மார்ச் 7: தமிழக சட்டசபை தேர்தலையொட்டி தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டணியில் காங் கிரஸ், தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மக்கள் நீதி மய்யம் உள்பட 21 கட்சிகள் உள்ளன.

தி.மு.க. கூட்டணியில் ஓரிரு நாள்களில் தொகுதி பங்கீட்டை இறுதி செய்ய தி.மு.க. தலைமை முடிவு செய்துள்ளது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு 28 தொகுதிகள் ஒதுக்கப் பட்டுள்ளன. இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி ஆகியவற்றுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. இதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஏணி சின்னத்திலும், மனிதநேய மக்கள் கட்சி உதயசூரியன் சின்னத்திலும் போட்டியிட முடிவு செய்துள்ளன.

கடந்த முறை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிட்ட 3 தொகுதி களிலும் தோல்வி அடைந் தது. இந்த முறை அக்கட்சிக்கு ஒரு தொகுதி குறைக்கப் பட்டுள்ளது. கடந்த முறை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட 2 தொகுதி களிலும் மனிதநேய மக்கள் கட்சி வெற்றி அடைந்ததால் இந்த முறை தொகுதிகள் எண்ணிக்கை குறைக்கப்பட வில்லை.

புதிதாக தி.மு.க. கூட்ட ணியில் இணைந்துள்ள தே.மு. தி.க.வுக்கு 10 தொகுதி கள் ஒதுக்கப்படலாம் என்று தெரிகிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வட தமிழகத்தில், விடு தலை சிறுத்தைகள் கட்சி மூலம் தலித் வாக்குகளையும், தே.மு.தி.க. மூலம் தெலுங்கை தாய்மொழியாக கொண்ட வாக்காளர்கள் மற்றும் பிற்பட்டோர் சமூக வாக்குகளை ஒருங்கி ணைத்து வெற்றி பெற வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் உத்தியாகும்.

கடந்த முறை உதயசூரியன் சின்னத்தில் 6 தொகுதிகளில் போட்டியிட்ட ம.தி.மு.க., 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இப்போது தனி சின்னத்தில் போட்டியிட முடிவு செய்யப்பட்டதால் 4 தொகுதிகள் மட்டும் ஒதுக் கப்படும் என தெரிகிறது.

கடந்த முறை தலா 6 தொகுதிகளில் போட்டி யிட்ட இந்திய கம்யூனிஸ்டு மற்றும் மார்க்சிஸ்டு கம்யூ னிஸ்டு ஆகியவை தலா 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றன. எனவே இந்த இரு கட்சிகளுக்கும் தலா 4 தொகுதிகள் ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக இணைந்த மக்கள் நீதி மய்யத்துக்கு டார்ச் லைட் சின்னத்தில் 2 தொகுதிகள் ஒதுக்கப்பட உள்ளன. கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி கடந்த முறை உதயசூரியன் சின்னத் தில் 3 தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதி யில் மட்டுமே வெற்றி பெற்றதால், இந்த முறை 2 தொகுதிகள் மட்டுமே உதயசூரியன் சின்னத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, மனிதநேய ஜனநாயக பேரவை, கொங்கு இளைஞர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை, புதிய திராவிடர் கழகம் உள்ளிட்ட சில சிறு கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் 172 தொகுதிகளில் வேட்பா ளர்கள் களம் இறக்கப்பட உள்ளனர். 62 தொகுதிகளில் தனி சின்னத்தில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் போட்டி யிட உள்ளதாக தி.மு.க. வட் டாரத்தில் கூறப்படுகிறது.

# ஓபிஎஸ் மீது பதியப்பட்ட 4 தேர்தல் வழக்கு ரத்து



சென்னை, மார்ச் 7: கடந்த 2024-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது ராமநாதபுரம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் விதிமீறல்களில் ஈடுபட்டதாக பரமக்குடி, திருவாடானை, திருப்புல்லாணி, கீழக்கரை காவல் நிலையங்களில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை ரத்து செய்யக்கோரி ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராஜலட்சுமி, ‘‘தேர்தல் விதிமீறல்களில் ஈடுபட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகார் அளிக்காத நிலையில், காவல்துறை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

ஒரு வழக்கில் காலதாமதமாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்’’ என வாதிட்டார். அதையடுத்து நீதிபதி, 4 வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com